# கிறிஸ்தோபகாரி.

# THE CHRISTIAN FRIEND.

Vol. III, No. 1. ஆடி மாதம், 1872.

## THE DEAD SEA.

## சேத்த கடல்.

உப்புக்கடல் அல்லது செத்தகடல் பலஸ்தீனாவிற் பெரிதும் அநேககாரியங்களில் உலகத்தில் மிகக் கவனிக்கப்படத்தக்க வாவியுமாயிருக்கின்றது. ஆனபடியால் அது தற்காலத்திலும் முற்காலத்திலும் பற்பல நாமங்களை உடையதாயிருக்கின்றது. வேதாகமத்தில் வழக்கமாய் அது உப்புக்கடல் என்று அழைக்கப்படும். மேற்குக்கடல் என்று அழைக்கப்பட்ட மத்திதாணியாக் கடலிலிருந்து பகுத்தறியும்படி "சமபூமிக்கடல்" என்றும் உபா. IV : 49.) "கீழ்க்கடல்" என்றும் (எசேக். XLVII : 18.) சொல்லப்படும். வழக்கமான பாரம்பரையில் சோதோம்பட்டணம் அதில் அமிழ்ந்திப்போனதாகச் சொல்லுகிறபடியினால், சந்தேகமின்றி இதினிமித்தமே, தலமட் என்னும் யூதருடைய பாரம்பரையில் "சோதோம் கடல்" என்று அழைக்கப்பட்டது. அதின் கரையில் அல்லது அக்கரைத்தண்ணீரில் (Asphaltum) அஸ்பல்றம் அல்லது நீலக்கீல்மிதக்கக் காணப்பட்டபடியால் (Josephus) யோசீபஸ் மற்றும் அக்காலத்து ஆக்கியோர்களும் "அஸ்பல்றிக்வாவி" என்றநாமத்தைப் பாவிக்கிறார்கள். ஆனால் அதில் சீவ செந்துக்களொன்றும் சீவிக்கக்கூடாமையே "செத்தகடல்" என்பதற்கு (Jerome) ஜெரோம் என்பவர் கொடுக்கும் நியாயம் இது சரியான நியாயம் என்பதைத் தற்கால ஆராய்வுவேண்டிய அளவு நிச்சயப்படுத்துகிறது. அக்கரைப்பட்டோர் அதின் சரித்திரக்குறிப்பின்படி "லோத்தின் கடல்" என்று அழைக்கிறார்கள்.

செத்தகடலின் கரையோரங்களெங்கும் பாழ்நிலமாய்க் கிடக்கவில்லை (Engedi) என்ஸ்டியென்னும் வெளியிலே மேற்குப்பக்கத்தில் அதிக பகுதி செழிப்பான சோலையினால் மூடப்பட்டிருக்கின்றது. ஒருமுறை பேரீஞ்சுக்காட்டுக்கும் குங்குலியக் குலைகளுக்கும் பேர்போன இடம். இப்போ இவைகள் அற்றுப்போயின. வேலமரம், தமறிஸ்க்மரம், பெரிய அத்திமரம் முதலியவற்றால் இப்போ செழிப்பாயிருக்கின்றது. தோடையைப் போலத்தோற்றும் சோதோமத்தியென்னும் அஸ்கிளிப்பியஸ வளருகின்றது. இப்பழம் காட்சிக்கினிமையும், தொட மெதுவாகவுமிருக்கும். அமர்த்தினால் அல்லது அடித்தால், கையில் [illegible] தும்பும், மெல்லிய தோலுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்க மற்றது படாரென்று வெடித்துப் பறக்கும். என்ஸ்டிசாரவிலே தாவீது தன் முயற்சியான காலங்களைச் செலவழித்தான்.

செத்தகடலின் தண்ணீர் மற்றெந்த உப்புச்சலத்திலும் மிகக் கைப்புள்ளது. நாவில்விட்டால் கசத்து அருவருத்துப் பிசுபிசென்றிருக்கும். இன்னும் மதித்திராணியாத் தண்ணீரைப்போல நீலநிறமுள்ள ஒளியுருவத்தக்க தண்ணீராயிருக்கின்றது. மற்றுந் தண்ணீரைப்பார்க்கிலும் அதிக பாரமானது. அதில் ஒரு பிரயாணி தன் தலையும் தோளும் தண்ணீர்மேல் நிறுதிட்டமாய் நிற்க நீந்திலேனென்கிறான். இதற்குக் காரணம் மற்றும்வழக்கமான உப்புத்தண்ணீரைப்பார்க்கிலும் ஆறுமடங்கு உப்புச் சேர்ந்திருப்பதே. இதில் கிட்டத்தட்ட மூன்றிலொருபங்கு வழக்கமான உப்பும், இரண்டுபங்கு காந்த உப்பும் அடங்கியிருக்கிறது. ஆகையினால் யோர்தானிலிருந்துவந்து இவ்வாவிக்குள் விழும் ஒவ்வொரு சீவசெந்தும் மரிக்கின்றது. கடலிலிருந்து கெந்தகபுகை எழும்புகின்றது. கரையிற் கெந்தக ஊற்றுக்கள் குமிழிக்கின்றன. பாழான வெளிகளில் கெந்தகம் படைபடையாக அல்லது துணிக்கை துணிக்கைகளாகக் கிடக்கின்றது. நிலக்கீல் கும்பம் கும்பமாய் அடியிலிருந்து மிதந்து, மலைகளின் வெடிப்புகளுக்கூடாகப் பொசிந்து கரையில் மக்கியுடன் கிடக்கின்றது.

செத்தகடல் பெரிய கிடாரத்துக்குள் கிடக்குமாப்போலிருக்கின்றது. வருஷத்தின் அதிக பகுதிக்குச் சூரிய அனலில் அகப்பட்டு, வெண்மையான மலைகள் வெளிகள் சூழ்ந்திருப்பதினால் அது பாழ்போன தனிமையான இடமாய்த் தோற்றுகின்றது. ஆனபடியால் அது முற்காலங்களில் அனேகவித குருட்டெப்பத்திக்கு உறைவிடமாயிருந்தது. அதில் ஒரு செங்கட்டி தாளமாட்டாதென்று (Seneca) செனிகா என்னும் பூர்வீக வித்துவான் சொல்லுகிறார். பூர்வீக பிரயாணிகள் அந்த வாவியைக் கொடிய கீழுலகமென விபரிக்கிறார்கள். அதின் கருமையான தண்ணீர் நாற்றமுள்ள புகையைவீசி சூழவிருக்கிற பயிரை அழிக்கும். ஆனபடியாற்றான் பறவைகளும், அந்தச் சாவை வருவிக்கும் தண்ணீர்மேல் பறக்கமாட்டாவென ஊர்க்கதை பிறந்தது. இது கட்டுக்கதை. அது அதிக புகைவீசுகுதென்பதும், கெந்தக ஊற்றிலும் சகதிகளிலுமிருந்து எழும்பும் புகை, கட்டைக்கணக்கான காற்றை நச்சுப்படுத்துமென்றும், வடக்குத் தெற்குப்பக்கத்தின் சகதியிலிருந்து காச்சலுண்டுபடுகுதென்றும், இப்படிக் குடிசனங்களைத் துன்பவாளிகளாக்கிப் பெலட்சயப்படுத்துகிறதென்பதும் உண்மை. ஆனால் இது செத்தகடற்றண்ணீரினாலல்ல, எந்தக்கரையிற் பெரிய ஊற்றுக் குமிளிக்கின்றதோ, எந்த மலையிலிருந்து சிற்றாறு பாய்கின்றதோ, அந்த இடத்திலே உஷ்ணதேசத்துக்குரிய, மரங்கள், செடிகள், புட்பங்கள் செனிக்கின்றன. மற்றும் சுவாத்தியமான தேசத்திற்போல் இங்கும் பட்சிகளினிமையாய்ப்பாடும். அராபியன் தன் சகோதரனைப்போல இங்கே கூடாரமடிக்கிறான். கமக்காரன் இங்கே ஏராளமான பலனைப் பெறுகிறான்.

D. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE SCAPE-GOAT.

## • பிராயச்சித்தக் கடா.

யூதவருடத்தில் பிராயச்சித்தநாளே மகா முக்கிய தினம். அது ஆசரிக்கப்பட்ட விதத்தைக்குறித்து லேவியராகமம் 23 ம் அதிகாரம் தெளிவாய் விளக்கும். (Ver. 27 : 32.) இவ்வசனங்களில் மோசேயின் பிரமாணத்தில் நியமிக்கப்பட்ட இப்பெரிய தினத்தை ஆசரிக்கும் முறையை எவ்வித காத்திரமாகத் தேவன் காட்டுகிறார் என்று விளங்கும. இத்தருணத்திற்றான் பிரதான ஆசாரியன் பரிசுத்தத்தில் பரிசுத்தத்துக்குட்புகலாம். பிரதான ஆசாரியனும் அவன் குடும்பத்தவர்களும் சுத்திகரிக்கப்பட்டு, தங்கட்காகத் தாங்கள் செலவுபொறுத்துத் தாங்களே பலிசெலுத்துவார்கள். இப்படிச் சுத்திகரிக்கப்பட்ட ஆசாரியன்தானே ஆலயத்துக்கும் அதிலடங்கியவைகட்கும் பிராயச்சித்தப்பலிசெலுத்துவான். சனங்கள் நிமித்தியம் பாவப்பலியாக இரண்டு வெள்ளாடும், தகன பலியாக ஒரு செம்மறிக்கடாவுங் கொள்ளும்படி பொதுப்பொக்கிஷத்திலிருந்து பணம் இறுக்கப்படும். இரண்டு வெள்ளாடும் ஆவாசத்துக்கு முன் கொண்டுவரப்பட்டபொழுது, ஒன்று யெகோவாவுக்கும் மற்றது (Azazel,) அஸ்ஸேலுக்கு அதாவது தப்பிவிடும்படி திருவுளச்சீட்டுப் போடப்படும். யெகோவாவுக்கென்று சீட்டு விழுந்த ஆடு கொல்லப்பட நியமிக்கப்படும். அதின் இரத்தம் இரக்க ஆசனத்துக்குமுன் சிந்தப்படும். மற்ற ஆட்டின் தலைமேல் ஆசாரியன் கை வைத்து சனங்களின் பாவங்களை அறிக்கையிடுவான். பின்பு நியமிக்கப்பட்ட மனிதன், அந்த ஆட்டை ஒருவருமில்லாத வனாந்தரத்துக்குச் சாய்த்துக் கொண்டுபோய் அவிழ்த்துவிடுவான்.

இவ்விரண்டாடுகளும் குறிக்கும் அடையாளங்கள், ஒன்றைக்கொல்லல் நமக்காக யேசுபட்டபாட்டையும் மரணத்தையும் காட்ட எண்ணப்பட்டது ; தப்பிவிட்டாடு அவர் நம்மை விடுவிக்க உயிர்த்தெழுந்ததைக் குறிக்கும். அந்த ஆட்டை வனாந்தரத்துக்குக் கொண்டுபோதல் பாவத்தைச் சனங்களிலிருந்தும் தேவனுடை பார்வையிலிருந்தும் அகற்றுவதைக் குறிக்கும். இது மனிதரால் அசட்டைபண்ணப்பட்டு வனாந்தரத்தில் பலவித மோசத்துக்கு ஏதுவாயிருத்தல் எங்கள் கர்த்தர் தேவனாலும் மனுஷராலும் சொந்தச் சீஷராலும் கைவிடப்பட்டு அவர் பட்டபாடுகளையும் மோசங்களையும் குறிக்கும். மெய்யாகவே மகா பிராயச்சித்த நாளைக்குறித்த சடங்குகள் உலகத்தின் பாவத்தைத் தருந்தகாலத்தில் சுமக்கவந்தவரையே குறிக்கும். இவர்நிமித்தியமே தேவன் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு விசுவாசிக்கிற பாவியை மன்னிக்கிறார்.

### யூதமிஷ்னு.

கிறிஸ்துவுக்குப்பின் இரண்டாம் சதார்த்தத்தில் எழுதப்பட்ட இப்புத்தகம் தேவவாக்குக்கு வியாக்கியானமாகச் சொல்லப்பட்டது. இது பிராயச்சித்த ஆட்டைப்பற்றிய அநேக நூதன கதைகளை அடக்கியிருக்கின்றது. இரண்டு பிராயச்சித்த ஆடுகளும் ஒரே தோற்றம், பருப்பம், விலையுள்ளதாயிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. முதல் திருவுளச்சீட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னைத்தடியிற் செய்யப்பட்டது. பின்பு பொன்னாலே செய்யப்பட்டது. அவைகளைச் சின்னப்பெட்டிக்குள் அல்லது குடுவைக்குள் வைப்பார்கள். பிரதான ஆசாரியன் இரண்டாடுகளையும் தனக்கு அக்கமும் பக்கமும் நிற்கப்பண்ணித் தன் இருகைகளையும் பெட்டிக்குள் வைத்துக் கைக்கொரு திருவுளச்சீட்டாய் எடுப்பான். ஒவ்வொருகையிற் சீட்டும், அந்தந்த வளத்தில் நிற்கும் ஆட்டுக்குரியது. அசேஸ்லுக்குரியது வலதுகையில் வந்தால், நற்சகுனம் என்னப்படும். பின்பு பிரதான ஆசாரியன் நாவைப்போல் வெட்டப்பட்ட "செந்நா" என்றழைக்கப்படும் இரத்தாம்பரத்துண்டைப் பிராயச்சித்தாட்டின் தலையில் கட்டுவான். இக்காரியத்தில் கற்ற யூதபண்டிதரொருவர், இந்த ஆடு அனுப்பப்படவேண்டிய நேரமானபொழுது இதைப் பகுத்தறியும்படியே இப்படிச்செய்யப்படுகிறதென்கிறார். ஆசாரியன் ஆட்டின் தலைமேல் கைவைத்துக்கொண்டு பண்ணிய பிரார்த்தனை பின் வருகிறபடியே "ஆ! கர்த்தாவே, இஸ்ரவேலராகிய உமது சனம் உமக்குவிரோதமாய்க் கலகம்பண்ணிப் பாவஞ்செய்தார்கள். ஆ! கர்த்தாவே, உமது தாசனாகிய மோசேயின் பிரமாணத்திலிருக்கிறபடி கர்த்தர்முன் உங்கள்பாவங்களினின்று சுத்திகரிக்கப்படும்படி" பாவப்பிராயச்சித்தம் உங்களுக்கு அந்நாளிலுண்டு. ஆனபடியால் அவர்களுடைய மீறுதல்களையும் கலகங்களையும் பாவங்களையும் மன்னிக்கும்படி மன்றாடுகிறேன்." அந்த ஆட்டை நியமிக்கப்பட்ட மனிதன் சாய்த்துக்கொண்டுபோக முன் தோட்டியினால் குத்தி வனாந்தரவாசலில் குறிக்கப்பட்ட இடத்தில் வந்த உடனே, ஆடு கொண்டுபோனவன் ஆசாரியனுக்குக் கைப்பயில்காட்ட அவன் காத்து இருந்து வேறு சடங்குகளைத்துவங்குவான். ஆடுகொண்டுபோனவன் ஆசாரியனை உயர்ந்த மலையுச்சிக்குக் கொண்டுபோய் அவன் சாம்பலாகத் தள்ளிவிழுத்துவான், என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும் பழைய யூதச்சரித்திரத்தில் இந்த ஆடு இட்டமாய் விடப்படுமெனத் துலக்கமாய் விளங்குகிறது. இது சாய்த்துக்கொண்டுபோய் விடப்படும் அதிகப்பற்றான காடுகள் அதிக மேய்ச்சலுள்ளன. மற்றக்காடுகளில் இந்த ஆடு ஒருமலையிலிருந்து மற்றமலைக்குத்திரிந்து பசியில் வருந்தி முன்பட்டவாதையினால் கடைசியில் நிர்ப்பந்தமாய் மரிக்கும். இதைப்பார்த்து இரங்குகிறவனே! நீ நித்தியசீவனை அடையும்படி சபிக்கப்பட்ட மரணத்தைச் சகித்த பரம ஆட்டைப்பற்றி நினைந்து நன்றியுள்ளவனாய இருப்பாயாக.

E. R.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BRIEF SKETCH OF THE WESLEYAN TAMIL MISSION CEYLON.

# இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள வெஸ்லியன்மிசியோன், சரித்திரப்போழிப்பு.

உலகமெங்கும் போய்ச் சிருட்டிகளாகிய அனைவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கற்பித்த இரட்சாபெருமான் வாக்குக்கு மாறாக முந்தப் பறங்கிக்காரரும், பிந்த உலாந்தாக்காரரும் மகமதுவை நிகர்த்த இத்தேசவாசிகளைப் பிழுத்துப் பலாத்காரமாய், தொம்சுவாம், தொம்பிலிப்பு என ஞானஸ்நானங் கொடுத்தார்கள். இதனால் சுதேசிகள் மனம் புண்பட்டது மாத்திரமல்ல, கிறிஸ்துமார்க்கமென்ற சொல்லும் அவர்களுக்குப் பிள்ளைகள்காதிற் கேட்ட, "ஆத்தை உம்மாண்டி" போலாயிற்றென்பதிற் சங்கையேது? ஒருவேளை கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்குத் தேவனால் வந்த மார்க்கம்போலல்ல; பூதேவனாகிய பசாசிலிருந்துவந்ததெனவும் மதித்திருப்பார்கள். இவ்வித நிந்தையைக் கிறிஸ்தமார்க்கத்தில் நின்று அகற்றவே தேவன் மேலேகுறித்த இரு இராசாங்கங்களையும் ஒன்றன்பின்னொன்றராய்க் கவிழ்த்தார். அதன்மேல் ஆட்டுத்தொழுவங்களில் கறவையாடுகளின்பின் திரிந்த தாவீதை அழைத்து சவுலுக்குப் பதிலாய் இஸ்ரவேலரின் சிம்மாசனத்திலேற்றிய தேவன் தனது குமாரனின் இராச்சியம் இலங்கை இந்தியாவிலும் பரம்புவதற்கோர் படர்தடிபோட்ட பான்மையாய்த் தாம் தெரிந்துகொண்ட இங்கிலீசிய அரசின்கீழ் இத்தேசங்களையும் ஒப்புவித்தார். இதுசமயமே இருளில்வசிக்கும் இந்தியரும் இலங்கைவாசிகளும் ஒளியைக் காணவும் சாத்தானின அதிகாரத்தின் கீழாகவிருக்கும் இவர்களைத் தேவனிடத்திற்குத் திருப்பவும்வேண்டுமென இங்கிலாந்திலுள்ள பற்பல சங்கத்தவர்கள் முயற்சிப்பட்டார்கள். இவர்களில் வெஸ்லியன் மிசியோன் சங்கத்தாருமொருவர்.

இக்காலத்திற்றான் வெஸ்லியன்மிசியன் சங்கத்தை மேலாம் நிலையில் ஸ்தாபித்தற்கு Rev. Messrs. George Morley, Jabez Bunting, William Naylor, James Buckley and Richard Watson) சோட்சு மோர்லி, ஜெபிஸ் பன்றிங்கு, வில்லியம் நெயிலர், யேமிஸ் பக்கிலி, இறிச்சேட் வாற்ஸன் என்னுந் தெய்வதொண்டர்கள் முயற்சிசெய்து 1813 ம் ஆண்டு(Leeds) லீற்சு என்னும் நகரத்திற் பாளிமேந்தென்னும் இங்கிலீசிய மகாசங்கத்தவரிலொருவராகிய மகாகனம்பொருந்திய தோமஸ்தொம்சன் துரையைச் சங்கத்தலைவராகக்கொண்டு வெஸ்லியன் மிசியன் சங்கத்தை ஆரம்பித்தார்கள். இச்சங்கத்தின் கீழாகவே இந்தியா இலங்கை முதலிய இடங்களுக்கும் மிசியோனரிகளை அனுப்பவேண்டுமெனத் தெய்வபத்தனும் வேதபண்டிதருமான (Dr. Coke) டாக்தர் கோக்கு குறித்த சங்கத்தவர்களைக் கேட்டார். சங்கத்தில் அன்னேரம் பணமில்லாததால் கூடாதென்று மறுத்தார்கள். அதுகேட்ட கோக்குப் பண்டிதர் அப்படியானால் நான் என் சொந்த ஆஸ்திகளையும் பணத்தையுஞ் செலவிட்டு அங்கே போய் இலங்கைவாசிகளுக்கு என் சீவனின் இலக்காகிய இனுவையின் ஞானத்தைக் கூறவிடுங்களெனக் கண்ணீரோடுங் கேட்டுநின்றார். அவர் இதுகாரியத்தைக் குறித்துத் தனது சிநேகிதனொருவருக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுதும்போது நான் ஐரோப்பாவைத் துறந்து இலங்கையிற் போயிருந்து
அவர்களுக்காய் சீவிக்கப்போகிறேன். தேவன் என்னை இலங்கைக்குப் போ
வெனக்கற்பித்தார், நான் அங்கே போகாமல்விடுவெனிலும் ஆருமற்றவனாய்நிரு
வாணியாய் இலங்கைக்கரையிற் கிடப்பது நலமென அவரே எனக்குணர்த்
தியுமிருக்கிறார் என எழுதினார்.

வெஸ்லியன் சங்கத்தார் இந்தத் தெய்வபத்தனின் கேள்விக்கிடங்கொடுக்
கவே இதுதான்சமயமென 66 பராயமுள்ள கோக்குப்பண்டிதரும் (Rev.
Messrs. Harverd, Lynch, Squance, Erikine, Ault, Clough,) சார்வேட், லி
ஞ்சு, ஸ்குவான்ஸ், எர்சுயின், ஆல்ற், கிலாவ், என்னுங் குருமார் அறுவருடன்கா
லித்துறைகருதிக் கப்பல்யாத்திரியாய்ப் புறப்பட்டார்கள். வம்பாய்க்கரைக்கு
ச் சற்றே தூரத்தில் கோக்குப்பண்டிதரை அந்தத் தேய்வபத்தன்தனக்குண்டா
ன யாவற்றோடும் தேவபணிசெய்வதை நிறுத்தி உண்மையும் உத்தமமுமுள்
ள ஊழியக்காரனே என் சந்தோஷத்திற் பிரவேசியெனத் தேவசுதன் அழை
க்க அவருந் தேகவியோகமானார். மேய்ப்பனில்லா ஆடுகளை நிகர்த்து மற்
றேனைய குருமார் வம்பாயிலிறங்கினார்கள். கோக்குப்பண்டிதரின் தேகத்
தை நடுத்தீர்ப்பில் அன்று கடலே ஒப்புவிக்கட்டுமென நினைந்தாக்கும்.
கார்வேட் ஐயரும் கடலிற் சேமித்துவிட்டார். இவரைக் கடலில் அடக்க
ம்பண்ணினதைக் கேள்வியுற்றோர் இவரது மனம் மிக விசாலித்ததெனவும்,
அவ்வித பண்டிதரை ஒரு சவக்குழியிலல்ல அவர் மனம்போல் விரிந்த ஆழி
யசமுத்திரத்திலடக்குவதே தகுதியெனவும் மெச்சினார்கள்.

வம்பாய்சேர்ந்த குருமாரை "நானே நல்லமேய்ப்பன்" என்று அறிக்கை
யிட்ட கர்த்தர் தளரவிடவேயில்லை. இக்குருமாருக்கு (W. T. Money, Esq)
வம்பாய் வியாபாரிகளிலொருவராகிய டபிள்யூ. டி மொனியென்னும் இங்
கிலீசிய வர்த்தகனிடமிருந்து தேவன் பொருளுபகாரம் முதல்யாவுஞ் செய்
வித்தார். இக்குருமார்யாவருஞ் சுகமே காலித்துறை வந்துசேர்ந்தார்கள்.
வந்துசேர்ந்த இவர்கள் தங்கள் குருமார்கூட்டத்தை 1814 ம் ஞு ஆடி மீ
11 ந் திகதியிலன்று காலியிற்றானே கூடினார்கள். பிரார்த்தனையால் தேவ
சகாயம்பெற்று இச்சங்கத்தார் லிஞ்சு ஐயரும், ஸ்கூவான்ஸ் ஐயரும், யாழ்
ப்பாணத்துக்குப்போகவும், ஆல்று ஐயர் மட்டுக்கழப்புக்குச்செல்லவும், எர்
க்கின்ஸ ஐயர் மாத்துறைக்குப்போகவும் குளோவையர் காலியிற்றானே தங்
கவுந் தீர்ப்பிட்டார்கள். அந்தத் தீர்மானப்படியே சகலருந் தங்கள்தங்களு
க்கு நியமிக்கப்பட்டவிடங்களுக்குச் செல்லாமுன்னர் தேவ திருவிருந்தை
முறையே பருமாறிப் பிரார்த்தனையோடு தங்கள்தங்கள் ஸ்தானங்களுக்குச்
சென்றார்கள்.

யாழ்ப்பாணத்துக்குக் கரைமார்க்கமாய் வந்த குருமார் இருவருக்கும் அங்
கே மஸ்திறாத்தாகவிருந்த மோயாட்துரையிடம் தேவன் சகாயங்கற்பித்தார்.
இத்துரைமகன் அக்குருமாரைத் தன்வீட்டிற் சேர்த்துவைத்ததுமாத்திரமல்ல,
அவர்கள் வந்த ஊழியத்தைத் தாழ்வின்றி நடப்பிக்கவேற்ற பலசகாயங்களை
யுஞ் செய்தார். அவர் உதவியால் இவர்கள் பிரசங்கிப்பதற்கிடமும் பள்ளி
க்கூடங்கள் வைப்பதற்கு ஸ்தானங்களும் அகப்பட்டன. இந்தக்காலத்தி
ல் உலாந்தாக்காரரின் பிள்ளைகள் படிப்பதற்கு (Clayton) கிளேற்றன் என்
னுமோர் இராணுவச்சேவகன் வைத்த பள்ளிக்கூடமும் ஸ்கிறூதர் அம்மா
ளின் பள்ளிக்கூடமுந்தான் சீவியமிருந்தன. இவைகளில் முந்திய
தைக் குருமார் தங்கள் வசப்படுத்திப் பிந்தியதையும் போய்ப்பார்த்துவந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இக்குருமார் பள்ளிக்கூடங்களை வைக்க எத்தனிக்கவே சைவர் குரோதங்கொண்டு வேதங்கள் கற்பிக்கவேண்டாமென நின்றார்கள். நின்றுமென்ன, குறித்த அரைமகனின் செல்வாக்காலுந் தாவீதுப்பாதிரியாரின் சகாயத்தினாலும் வெஸ்லியன் குருமார் வண்ணார்பண்ணையிலுஞ் சிதாவியிலும் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள்.

1820 ம் ஆண்டில் ஏறக்குறைய 700 பிள்ளைகள் இவர்களிடங் கல்விகற்றுவந்தார்கள். அந்தக்காலத்தில் உண்டுபட்ட வைசூரி பேதியினால் குறித்ததொகையில் சரியரைவாசிப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்தைவிட்டுக் கலைய ஏதுவாயிற்று. 1834 ம் ஆண்டு மட்டாகச் சரியானவிதமாய் வேதங் கற்பிக்கும் முறையாய்ப் பள்ளிக்கூடங்களில் கல்வி பயிற்றப்படவேயில்லை. இந்த ஆண்டிற்றான் இங்கிலிஸ் மத்திய வித்தியாசாலையும் அங்கே தங்கிச்சாப்பிட்டு மாணாக்கர்படிக்க ஸ்தானங்களும், பெண்களுக்கு வித்தியாசாலையும், பிற தமிழ்ப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டன. கனம்பொருந்திய (Percival) பேர்சிவெல் ஐயர் வேறு இடங்களில் கல்விகற்றுத்தேறிய ஆறு ஏழு வாலிபரைத் தெரிந்து கல்விகற்பிக்க ஏற்படுத்தினார். தனக்குக்கீழான எந்த இடங்களுக்கும் உபாத்தியாயர் சுதேசகுருமார் முதலியோரைத் தனது வித்தியாசாலையில் நின்று அனுப்பவேண்டுமென்பதே பெரும்பாலும் இவர் கல்விவிஷயத்தில் சாக்கிரதையாய்க் கைவிடவந்த நியாயமும்விசேஷ அபிப்பிராயமுமாம். எழுவருஷங்களுக்குள் இவரதுநோக்கம் கைகூடிவந்ததெனக்காண்கிறோம். இவருக்குக்கீழாய் இவரது வித்தியாசாலையில் கல்விகற்ற இருபது மாணாக்கர் எந்தப்பணிவிடைகளிலுஞ் சமர்த்தராய் வெளிப்பட்டார்கள். இவர்கள் கல்வித்திறமை சாதுரிய சாமர்த்தியம் யாவராலும் மெச்சப்படத்தக்கது. யாழ்ப்பாண அரசனாகிய(Dyke) டயிக்துரை என்னிடம் வேலைகேட்க வருபவர்களில் எவன் பேர்சிவெலையரிடம் கல்விகற்றவனென்பதை நான் அவனோடு பேசாததற்குமுன் அவன் வரும்விதங்கண்டு குறிப்பாற் சொல்லுவேனென்றுரைத்தால் வேறுசாட்சியேன்.

இந்த மத்திய வித்தியாசாலையின் மாட்சிமை பின்னுந் துலங்கத்தக்கதாய் ஒரு ஐரோப்பிய உபாத்தியாயரையும் பெண்கள் வித்தியாசாலைக்கு ஒரு ஐரோப்பிய உபாத்தியாயினியையும் அழைப்பித்தார்.

(இன்னும் வரும்.)

## ROMANISM.

## ரோமான்மதம்.

### SACRAMENTS.

### சாக்கிர மெந்துக்கள்.

Two or Seven, which :—அவை இரண்டோ அல்லது ஏழோ? எது?—சிலவருஷங்களுக்குமுன், அயர்லாந்தின் மேற்கே (Johnny Mayo) யொன்னிமேயோ என்னும் [illegible]திய வேதானுசாரியான ஓர் கிறிஸ்தவனும் (Patrick Clare) பெற்றிக்கிளேயர் என்னும் ஓர் ரோமான் கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலிக்சனுமான் இரண்டு வாலிபர், சாக்கிரமெந்துக்களின் விஷயத்தின் பெயரில் மகாவேகமாய்த் தர்க்கம்பண்ணினதாகக் கேள்வியுண்டு.

இறின்து திருச்சபையில் யாதொரு சாக்கிரமெந்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ, என்பதல்ல. ஆனால் சாக்கிரமெந்துக்கள், எத்தனை ? இரண்டோ ? ஏழோ என்பதே கேள்வி.

Two I say :—யொன்னிமேயோ என்பவன் உத்தரமாய் ஞானஸ்நானம் கர்த்தருடைய திருவிருந்தாகிய, இரண்டு சாக்கிரமெந்துக்களைமாத்திரமே நமது துதிக்கப்படத்தக்க ஆண்டவர் ஏற்படுத்தினார். அவ்விரண்டுமே திருச்சபையிலுள்ள சாக்கிரமேந்துக்களென்றான்.

Seven I say :—பெற்றிக்கிளேயர் என்பவன் ஏழு சாக்கிரமெந்துக்களுண்டென்று சாதிக்கிறேனென்றான். எப்படியெனில் நமது துதிக்கப்படத்தக்க ஆண்டவர் ஒருமுறை, பெரிய சனத்திரளுக்கு ஐந்து அப்பத்தினாலும் இரண்டுமீனினாலும் பசியாற்றிவிட்ட சம்பவம் உனக்கு ஞாபகமாயிருக்குமே. ஐந்தும் இரண்டும் ஏழு என்பதும் உனக்குத்தெரியுமே. ஆகவே, நமதாண்டவர் ஏழு பதார்த்தங்களினால், சனத்திரளைப் போஷிப்பித்தபடியால் நமது திருச்சபையும் ஏழு பரிசுத்த சாக்கிரமெந்துக்களினால் போஷிப்பிக்கப்படவேண்டுமெனக் காட்டியிருக்கிறாரென்பதைப் பிரத்தியட்சமாய் நீ காணலாமே.

Five and two make seven :—யொன்னி மேயோ என்பவன் (Johnny Mayo) உத்தரமாக, நீசொல்லுகிறதில் பாதிக்குப்பக்கம் உண்மையுண்டென்பதற்கையமில்லை. யோவான் எழுதின சுவிசேஷம். ரு ம் அதிகாரம் ரு, கூ வசனங்களில் நாம் வாசித்திருக்கிறபடி நமதாண்டவர், ஒருமுறை ஐந்து அப்பங்களினாலும் இரண்டு மீன்களினாலும் ஐயாயிரவரைப் போஷிப்பித்தது மெய்யே. ஐந்தும் இரண்டும் ஏழென்பது நம்மெல்லாருக்குந் தெரியுமே. ஆனால் ஐயாயிரவரைப் போஷிப்பித்த அந்த அற்புதத்துக்கும் சாக்கிரமேந்துக்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதென்று சொல்லும்? என்றான்.

Deeds speak louder than words :—பெற்றிக்கிளேயர் என்பவன் (Patrick Clare) உத்தரமாய், நமது ஆண்டவர் செய்ததும் சொன்னதுமான ஒவ்வொன்றிலும், கருத்தும் போதனையுமுண்டென்று உமக்குத் தெரியாதா ? இப்பொழுது இவ்வற்புதம் சத்திய திருச்சபையானது ஏழு பரிசுத்த சாக்கிரமெந்துக்களினாலேயும் போஷிக்கப்படவும் தாபரிக்கப்படவும்வேண்டியதென்னும் மகா அபூர்வமான அற்புதத்தையேயன்றி வேறென்னத்தைக் குறித்துக் காட்டுகின்றது. ஆகவே நமது சபையானது ஏழு சாக்கிரமேந்துக்கள் இருக்கிறதென்று பெலப்பாய்ச் சாதிக்கிறதினாலும் நான் வேதத்தைக்கொண்டு உமக்குத் திருஷ்டாந்தப் படுத்தியபடியும் அதுவே சத்திய சபையாயிருக்கவேண்டும்.

But who made the five loaves :—யொன்னி மேயோ என்பவன் (Johnny Mayo) மாறுத்தரமாய், உமது வியாக்கியானம் மிகவுந் நேர்த்தி. உமது சபை ஏழு சாக்கிரமேந்துகளினால் தன்தங்கத்தவர்களைப் போஷிப்பிக்கப் பிரதிக்கினைபண்ணுதலில் தன் ஆதாரம் இத்தன்மையதென்று மிகவும் தெளிவாய் வெளிப்படுத்துகின்றது. மெத்த நல்லது. ஆனால் ஐந்து அப்பங்களையும் இரண்டுமீன்களையும் உண்டாக்கினவர்யாரென்று சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

God made the fishes and made the loaves :—பெற்றிக் கிளேயர்

என்பவர்(Patrick Clare)தேவனே சகலத்தையும் உண்டாக்கினவர். ஆகவே இரண்டு மீன்களையும் உண்டாக்கினவர் அவரே. அப்பத்தை உண்டாக்கினவர் யாரென்று நீரேன் என்னிடத்திற் கேட்கிறீர். அப்பம் ஆராலுண்டாக்கப்பட்டதென்று எவருக்குந் தெரியுமே என்றார்.

இவ்விதமே தேவன் இரண்டு சாக்கிரமெந்துக்களைமாத்திரம் ஏற்படுத்தினார். மற்ற ஐந்தையும் மனுஷரே ஏற்படுத்தினார்களென்க (Jonny Mayo) யொன்னிமேயோ என்பவன், சாக்கிரமேந்துக்களும் சரியாய் அப்படித்தானுண்டாயின. நமது துதிக்கப்படத்தக்க ஆண்டவர் இரண்டு சாக்கிரமெந்துக்களைமாத்திரம் உண்டாக்கி ஏற்படுத்தினார். உங்கள் சபையைச்சேர்ந்த மனுஷரோ, திடப்படுத்தல், தவம், அவஸ்தைப்பூசை, குருப்பட்டம், விவாகம், என்னும் மற்ற ஐந்தையும் கூட்டிச் சேர்த்துக்கொண்டார்களென்றார்.

Who had the best of the argument :—இவர்களில் யாருடைய நியாயம் உத்தமமென்றும், சத்தியத்தின்பலம், மாத்திரமல்ல, நியாயத்தின்பலமும், யார்பக்கத்தில், சயங்கொண்டதென்றும் இதை வாசிப்போர் தெளிவாய்க் காண்பார்கள். கிறிஸ்துவின் திருச்சபைக்கும், ரோமைச்சபைக்குமிடையே உண்டாயிருக்கும் இந்தக்கேள்வியை இவர்களுடைய வாக்குவாதமே வெளிப்படுத்தும்.

Divine appointment and an outward element necessary to make Sacrament :—சாக்கிரமெந்துக்களைப்பற்றிய இந்தக்கேள்வியை இப்பொழுது ஆராய்ந்துபார்ப்போமாக.

சத்தசத்திய வேதானுசாரிகளான புறப்பட்ட ஸ்தந்தக்கிறிஸ்தவர்கள் இரண்டு சாக்கிரமெந்துக்கள் மாத்திரமுண்டென்று விசுவாசித்திருக்க, ரோமைச்சபையோ ஏழுசாக்கிரமெந்துக்களுண்டென்று சாதிக்கின்றது. ஒரு சாக்கிரமெந்தை ஏற்படுத்த, தேவநியமமும், அத்தோடுகூடக் கிறிஸ்துவினாலேயே நியமிக்கப்பட்ட வெளியரங்கமான ஒருபொருளும் அகத்தியமாயிருக்கவேண்டியதென்பதை, இருபகுதியாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

The true Sacraments :—ஞானஸ்நானமானது கிறிஸ்துவினால், புறம்பான அடையாளமாகிய சலத்தோடு ஏற்படுத்தப்பட்டது. மத்தேயு. 28 : 16 பார்.

ஆகவே, அது ஒரு சாக்கிரமெந்தாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதுபோலவே கர்த்தருடைய இராப்போசனத்திலிருந்தும் புறம்பான அடையாளங்களாகிய அப்பத்தோடும், ரசத்தோடும், கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே அதுவும் சாக்கிரமெந்தாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ரோமைச்சபையின் நவமான ஐந்து சாக்கிரமெந்துக்களும் இப்பரிசோதனைக்கு எப்படியும் நிற்கவே மாட்டா.

The false Sacraments :—திடப்படுத்தல் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்படவில்லை. சத்தியவேதானுசாரிகளான, குருப்பிரதானித்துவ திருச்சபையார் (The Protestant Episcopalians) திடப்படுத்தும் முறைமையை அனுசரித்து வந்தாலும், அவர்கள் அதைத் திருச்சபை நியதியாக, மதிக்கிறதன்றி, கிறிஸ்துவினாலேற்படுத்தப்பட்ட ஓர் நியமமாக மதிக்கிறதில்லை. ஆவியின் வரங்கள் அபூர்வமாய் அருளப்படுவதற்காகவே அப்போஸ்தலர் தங்கள் கரங்களைச் சிரசின்மீதா வைத்தார்கள்.

The Church of Rome herself uncertain as to the time, when Confirmation was instituted:—திடப்படுத்தல் ஏற்படுத்தப்பட்டகாலம் எப்பொழுதென்று ரோமைச்சபைக்குத்தானே நிசந்தெரியாது. சாக்கிரமெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றெண்ணப்பட்ட இந்த முறைமையைப்பற்றி (Dr. Doyle) டக்றர் டோயில், என்பவருடைய வினவிடைப் புஸ்தகத்தில், பின்வருங் கேள்வியும் மறுமொழியும் அடங்கியிருக்கின்றது.

கேள்வி. கிறிஸ்துவானவர் இந்தச் சாக்கிரமெந்தை, எப்போ ஸ்தாபித்தார்?

மறுமொழி. சரியானகாலம் எப்பொழுதென்று நிச்சயமாய்த் தெரியாது. ஆனாலும் வேதபண்டிதர்கள், அது கிறிஸ்துநாதர் அனுசரித்த கடைசி இராப்போசனத்திலென்றும், அல்லது அவரது உயிர்த்தெழுதலுக்கும் பரமண்டலத்துக்கெழுந்தருளியதற்கு இடையிலென்றுஞ் சாதிக்கிறார்கள்.

Penance not appointed by Christ:-தவம் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்படவில்லை. ரோமைச்சபையானது கிறிஸ்துவினாலே தவம் ஏற்படுத்தப்பட்டதென்று ரூபிக்க, சக்தியுள்ளதாய் ஒருக்காலும் இருந்ததில்லை. தவசு ஏற்படுத்தப்பட்ட, காலம், இடம், எப்போ? எங்கே? என்றாவது தவசு என்ற சொல்லுத்தானும் வேதாகமத்தில் ஆதியோடந்தமாக எங்கேயாவது காணப்படக்கூடுமென்றாயினும் அச்சபை சொல்லவே முடியாது.

Extreme unction was not instituted by Christ:—அவஸ்தைப்பூசை கிறிஸ்துவினால் நியமிக்கப்படவில்லை. மரணவஸ்தைப்படுகிறவர்களுக்கு எண்ணெய்பூசுதலாகிய, அவஸ்தைப்பூசையானது கிறிஸ்துவினால் நியமிக்கப்பட்டதேயில்லை. இதற்குச்சார்பாக மாற்கு எழுதின சுவிசேஷம். 6 ம் அதிகாரம், 18 ம் வசனத்தையும், யாக்கோபு எழுதின நிருபம். 5 ம் அதிகாரம், 14 ம் 15 ம் வசனங்களையும் எடுத்துக்காட்டலாம். இவைகளோ தேசசவுக்கியத்தை விசேஷமாய்க் குறிக்கின்றன. ஆனால் அவஸதை பூசுதல் ஆற்றும் சுகத்தைக் குறித்துக்காட்டுகிறது.

அப்போஸ்தலர் மரணத்துக்குரிய மோச நிலைபரத்தில் இல்லாதவர்களுக்குத் தயிலாபிஷேகம்பண்ணினார்கள். ஆனால் அவஸ்தைப்பூசையோ, இனிப்பிழைப்பார்களென்னும் நம்பிக்கையற்ற மரணத்தறுவாயிலிருப்பவர்களுக்குமாத்திரமே கொடுக்கப்படுகிறது.

Orders or Ordination of Ministers has no outward element:—குருப்பட்டந்தரித்தல் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் அவர் புறம்பான அடையாளமாகிய யாதொரு பொருளையும் ஏற்படுத்தவில்லை. ஆகவே அது ஒரு சாக்கிரமெந்தல்ல.

Matrimony instituted in Paradise, therefore not an institution of the new law:—விவாகமானது கிறிஸ்துவுக்கு நாலாயிரம்வருஷங்களுக்கு முன் பரதீசில், தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஓர் நியமம். ஆகையால் அது புதுப்பிரமாணத்துச்குரிய ஏற்பாடல்லவே. ரோமைச்சபையானது, திரும்பவும் இந்த விஷயத்தின்பெயரில் தனது சந்தேகத்தை ஒத்துக்கொள்ளுகின்றது. எப்படியெனில் (Dr Doyle) டக்றர் டோயில் என்பவருடைய வினவிடைப் புஸ்தகத்தில் பின்வருங் கேள்வி மறுமொழிகள் அடங்கியிருக்கின்றன.

கேள்வி. விவாகமானது புதிய ஏற்பாட்டின் சாக்கிரமெந்தாக எப்போ ஏற்படுத்தப்பட்டது?

மறுமொழி. கிறிஸ்துவானவர் இந்தச் சாக்கிரமெந்தை எப்பொழுது எவ்விடத்தில் ஏற்படுத்தினாரென்பது திட்டமாய்த் தெரியாது.

If Matrimony is a Sacrament why does not the church of Rome allow her Priests to marry:—விவாகம் ஓர் சாக்கிரமெந்தானால், ரோமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்சபையன் தன் குருக்கள்மார் விவாகம்பண்ண இடங்கொடுக்கிறதில்லை? ரோமைச்சபையானது விவாகத்தை ஒரு சாக்கிரமெந்தாக உயர்த்தி ஏற்படுத்தி இருக்கினும் அதைத் தன் குருமாருக்கில்லையென்று மறுப்பது மகா ஆச்சரியந்தான். அது இச்சடங்காசாரத்தை மேன்மைப்படுத்தியபின்பு சிறுமைப்படுத்துகிறதே.

The characteristics of a Sacrament wanting in all these five:—சாக்கிரமெந்துக்குரிய தன்மைகள் இவ்வைந்திலுமில்லை. ரோமைச்சபையின் இப்புதிய அல்லது நூதன சாக்கிரமெந்துக்களைந்தையும் இவ்விதமாய் நாம் பரிசோதிக்குமிடத்துச் சாக்கிரமெந்துக்குரிய சில விசேஷகுணங்கள் அவைகளில் இல்லாதிருக்கக் காண்கிறோம்.

(இன்னும் வரும்.)

T. G.

## EDUCATION.

### THE CHILDREN FOR CHRIST.

### பிள்ளைகள் கிறிஸ்துவுக்கே உரியவர்கள்.

IV

"யெகோவாவைப் பற்றும் பயம் ஞானத்தின் ஆரம்பம்" என்ற வேதவாக்கியம் ஒரு பிரமாணமாய் மாத்திரமல்ல, சத்தியசம்பவமுமாயிருக்கின்றதென எற்கனவே காட்டினோம். இந்தச் சத்தியசம்பவம் பிரமாணத்தைப்பெலப்படுத்தும். பிரமாணம் இச் சத்தியசம்பவத்தை நிச்சயிக்கும். கிறிஸ்து பிள்ளைகளில் வைக்கும் முதல் உரித்தே இந்தச் சம்பவம். இதுபற்றியே கல்வித்தொழிலின் பயிற்சியைத் தேவன் ஆரம்பிக்கிறார். அவரைப்பற்றும் பயத்தைப் பிள்ளையின் இதயத்தில் ஸ்தாபித்தலே துவக்கம். கிறிஸ்துவினுரித்தை அங்கிகரித்தலே பிரமாணம். அவர் துடங்கும் முறையே நாமும் துவங்கவேண்டும். "பிள்ளைகளே வந்து எனக்குச் செவிகொடுங்கள் நான் யெகோவாவுக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்" என்று அவர் பிள்ளைகளை அழைத்தார். அவர் விதித்தவழியே பிள்ளைகளை அழைத்தல் எந்த உபாத்தியினதும் முந்திய கிரியையாகவேண்டும். இப்போதனையைத் தரும் விதமாய் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதெவ்வாறென்பது யாவருஞ் சிந்திக்கவேண்டிய முதல் வினா. கிறிஸ்துவின் சித்தம் யாதெனக் கேள்வியுற்றோம். அவர் வகுத்த தொகுத்த வழிவகைகளையுங் கண்டிருக்கிறோம். நாம் கற்கவேண்டிய யாவையும் இவைகளால் கற்றறியலாம். எங்கள் எசமானாகிய அவரினது அடிச்சுவட்டைப் பின்பற்றினால் வழி தவறோம்; ஆகவே அவ்வடிச்சுவடுகள் யாதெனச் சுருக்கத்தில் கூறுதல் நமதபிப்பிராயம்.

1. பிள்ளைகள் தேவனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டிய தார்மீக வஸ்துக்களென அவர்களை மதித்து நடத்து.

2. பிள்ளைகளும் சீர்கெட்ட [illegible]யுடையவர்களென்ற மதிப்போடவர்களை நடத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிள்ளைகள் பாவக்குணமுள்ள பாவிகளென்ற மதிப்போடவர்களை நடத்து. அவர்கள் மனச்சாட்சியிலும் அதுபதியவுணர்த்து.

4. பிள்ளைகள் யேசுவினால் தேடப்படுபவர்களென மதித்தவர்களை நடத்து. கர்த்தர் உன்னோடிருக்கும்பான்மையே பிள்ளைகளோடுமிருக்கிறாரெனவும் அவர்களுக்குச் சாட்சியிடு. பிள்ளைக்கும் அவருக்கும் இனிமேலிருக்கப் போகிற சம்பந்தத்தையல்ல, இப்பொழுதிருக்கும் சம்பந்தத்தையே காட்டியவர்களுக்குணர்த்து, இதுவே நீ கட்டும் நங்கூரம்.

5. பிள்ளைகள் தேவவாக்கின் பலத்த சத்தியங்களை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களெனவும் பாவித்து அவர்களை நடத்து.

6. ஆயினும் அவர்களைப் பாலியரெனவும், மதி. அவர்கள் பத்திவைராக்கியம் அவர்கள் வயதிற்கேற்றதாயிருக்குமே. வளர்ந்தவர்களில்காணும் பத்திவைராக்கியத்தைப்போன்ற பாசாங்கு காட்ட அல்லது வேடந்தரிக்க விடாதே. பிள்ளைகளினது களிப்புக்குஞ் சந்தோஷத்துக்கும் இசையவே பத்திவைராக்கியமுமிருக்கும்.

7. பிள்ளைகள் ஸ்திரி புருஷராயிருக்கவந்தவர்களன்றி இப்பொழுதேனும் இனிமேலாகிலும் தேவதூதர்களாய் அல்லவென்று பிசாசாய்ப் பிறப்பதற்கு வந்தவர்களல்லவே. அவர்கள் துக்க அனுபவத்திற்கும் குறும்புத்தன்மைக்குமே இசைந்த குணமுடையராய்ப் பிறந்திருக்கிறார்கள். ஆகவே சிட்சையினாலவர்கள் சீர்ப்படவேண்டும்.

8. பிள்ளைகளின் இராணிக்கிசையவே அவர்களுக்குக் கற்பித்தல்வேண்டும். அவர்களை அவர்கள் இராணியில் மேல்நோக்காய் பறக்கவிடாதே.

9. யாவற்றிலின்றும் விசேஷமாய்ப் பிள்ளைகளை மிகுந்த பட்சத்தோடும் தகுந்த நேசத்தோடும் நடத்தப்படவேண்டியவர்களென்பதை நினை.

10. பிள்ளைகளோடும் பிள்ளைகளுக்காகவும் பிரார்த்திப்பதவசியமென்று நினை.

11. இளமையிலே பிள்ளைகள் குணப்படுவார்களென்பதை நினைத்துக் காத்திரு. வேதமே இதற்குச் சாட்சி. எக்காலத்துள்ள இதிகாசங்களும் இதற்குச் சாட்சி. தற்கால அனுபவமுமிதற்குச் சாட்சி. கல்விப்பயிற்சி விதைத்தலுக்குச் சமமாம் தனித்தனியே வித்து யாவும் வளர்வது சங்கைக்கிடமாயினும் மொத்தமாய்ப் பலன்பிறக்குமென்பதிலேதுஞ் சங்கையின்றிக் காக்கும் நிச்சயத்தோடிரு.

J. O. R.

## INTEMPERANCE.

### HELPING MOTHER. (A STORY)

## மதுபானம்.

### தாய்க்குதவி (ஓர் நடந்த சங்கதி.)

இருபது வருஷங்களுக்குமுன் (England) இங்கிலாந்தின் தென்பாரிசமாய் கடற்கரையிலுள்ள (Portsmouth) போர்ட்ஸ்மவுத் என்னும்பட்டினத்தில் ஒரு சிறுத்தெருவில் (Margaret Hunt) மார்க்கிறற்கன்ற் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஏழை ஸ்திரியும் அவளுடைய பிள்ளைகளும் வாசம்பண்ணினார்கள்.

வசந்தகாலத்தில் ஒருநாள் சாயந்தரம் குளிர்ந்த வேளையில் தனது கைக்குழந்தையைத் தாராட்டும்போது, தன் அழுகையை அடக்கக் கூடாதவளாய் முகக் கோட்டரவுடனே துக்கசாகரத்தில் அமிழ்ந்தினவளாய் ஒரே அறைமாத்திரம் உள்ள தனது வீட்டில் (Margaret) மார்க்கிறற் என்பவள் உழுக்கார்ந்திருப்பதை நீ கண்டிருக்கக்கூடும்.

அவளுக்குச் சமீபமாய் பத்துவயதுள்ள அவளுடைய மகன் நின்றான். அவன் தனக்கு இளைய இரண்டு சகோதரிகளையும் பார்த்து, அம்மாவைத் தொந்தரவு படுத்தாதிருங்கள் என்றான். அவ்வேளையில் முரட்டுத்தனமுள்ள துற்குணப்பையன் ஒருவன் பக்கத்தில் நின்றான்.

அவர்களில் ஒரு சிறுபெண்பிள்ளை அந்த அறையின் ஒருமூலையில் கிடக்கிறவரைத் துக்கத்துடன் பார்த்து, தாயை நோக்கி, அம்மா இனி ஒருபொழுதும் ஐயா விழிக்கமாட்டாரா என்றாள். அதற்குத் தாய், மகளே, இல்லை, இல்லை; அவர் இறந்துபோனார், இனியொருக்காலும் விழிக்கமாட்டாரென்று அழுதழுது சொன்னாள்.

முதனாள் இராத்திரியே அவர்கள் பிதா தவறணையில் நின்று தலைகெட்ட வெறியுடன் வெகுநேரஞ்சென்று வீட்டிற்கு வருகையில், அவர்கள் வீடு ஒழுங்கையாயிருந்தபடியால் வாசற்படி தடக்கி, கீழ்ப்படிகளில் இடறிக் கற்கள் பரவியிருந்த அடித்தளத்தில் விழுந்து உடனே இறந்தான். அவன் வெகுகால மதுக்குடியன். அவனுடைய சமுசாரத்தவர் மிக வறியவர்களாய் இருந்தார்கள். மூத்தமகன் உழைக்கிற அற்பபணத்தை, தனக்குப் பிரியமானவேளை எப்போவாகுதல் கொடுக்கிறதுண்டு. அவனோ தன் நயம்பார்க்கிற ஒரு சோம்பேறி. அவன் தன் காரியம் பார்க்கிறதேயன்றி, தன் மாதா, சகாதர சகோதரிகளைச் சற்றுங் கவனிக்கிறதேயில்லை.

காரியமிப்படியிருந்ததால் (Mrs. Hunt) கனற் அம்மா வெகு துக்கத்தோடும் தரித்திரத்தோடும் தன் நாளைக் கழித்தாள். இப்பொழுதோ இக்கடைசி வியாகுலம் மிகக் கொடியதாயிருந்தது. அவள் தன் புருஷன் சீவனோடிருக்கையில், மனந்திரும்புவான். சொஸ்தபுத்தியுடையவனாய்ச் சீராய் நடப்பான் என்று நம்பியிருந்தாள். ஆயின், இப்போ இறந்துபோனான். தேவனிடம் இரக்கம் பெறவாகுதல் மனந்திரும்பவாகுதல் சணநேரமுங் கிடையாமல் சடுதியாய் இறந்தான்.

"வெறியர் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை" என்னுந் தேவவாக்கையும், தன் மூத்தமகனோ பிதாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதையும் நினைக்கிறதினால், திடுக்கிட்டு அடக்கக்கூடாத துக்கமுள்ளவளாயிருப்பது ஆச்சரியமல்ல!

"இன்றிரவு என்னசாப்பாடு இருக்குது" என்று மூர்க்கத்துடன் தன் தாயின் துக்க சிந்தனையைத் தடுத்துக் கேட்டான். அவள் கொஞ்சம் அப்பம் மாத்திரம் இருக்குது என்றாள். அதைக் கேட்டவுடன், சட்டெனத் தொப்பியை எடுத்துக்கொண்டு வெளியே போனான். அவன் போனவுடனே, முன்சொல்லிய சிறுபையனாகிய யோட்சு தன் மாதாவினிடத்திற்போய் தன் கையால் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அம்மா அழாதே, தயைசெய்து இப்படி அழாதே, ஐயா இறந்துபோனார். தேவனும் எங்களுடைய ஐயாவாயிருக்கிறார், அவர் எப்பொ[illegible], அவரே உத்தம நேசர், அவர் நம்மைப் பாதுகாப்பார், அப்படியே எங்கள் உபாத்தியாயர் பலமுறையுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்கிறார். அது நிச்சயமென்று நானும் நினைக்கிறேன். இனி அழாதே, இப்படி நீ துக்கப்படுவதைப்பார்க்க, என்னால் முடியாது அம்மா என்று சொன்னான். யோட்சென்பவன் தான் படித்துவந்த ஓய்வுநாட் பள்ளிக்கூடத்தில் ஒரு நல்ல படிப்பினையைப் படித்திருக்கிறானென்று காணலாம். நாம் உதவிக்காகப்பண்ணும் பிரார்த்தனையைக் கேட்க, ஆயத்தமாயிருக்கும் இரக்கமும் நேசமும் பொருந்திய இரட்சகர் இருக்கிறார் என்று நம்மைத்தாபரிக்கிறவர் எங்கள் சகல விசாரங்களையும் தம்மிடத்தில் ஒப்புவிக்கும்படி சொல்லியிருக்கிற பட்சமுள்ள நல்ல பரமபிதாவாய் இருக்கிறாரென்றும் படித்துக்கொண்டான். (Mrs. Hunt) கன்ற் அம்மாளோ(George)யோட்சென்பவனைப்போல நம்பிக்கையும் விசுவாசமுமுடையவளாய் இருக்கவில்லை. அவள் தன் சிறியமகனை ஆற்றும்படி தன் கண்ணீரைத் தொடைத்தாள். ஆனாலும் பிந்காலங்களில் துக்கமுஞ் சஞ்சலமும் வருமென்றஞ்சினாள்.

(இன்னும்வரும்.) T. G.

## SKETCH OF A SERMON.

## பிரசங்கக் குறிப்பு.

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபே. I: 7.

இதற்கடுத்த வசனங்களில் பவுல் அப்போஸ்தலன் தேவன் அருளின ஆவிக்குரிய மேன்மையான ஆசீர்பாதங்களின்நிமித்தம் தேவனைத்துதிக்கிறான். அவ்வாசீர்பாதங்களைவைகளென்று, 4, 5, 6 ம் வசனங்களிற் காண்க. முகவுரையில் அவர்களுக்குள் பெரிய ஆசீர்வாதமாகிய மீட்பைக்குறித்துப் பேசுகிறான்.

முதற்கவனிக்கவேண்டியது.
சொல்லப்பட்ட மீட்பென்ன.
இராசநிறையின் நின்றும்,
இச்சீவியத்துக்குரிய வருத்தங்கள், கிலேசங்களினின்றும்,
மீட்கப்படுவது சதாகாலமீட்பல்ல.
பாவஅதிகாரத்தினின்றும்,
தேவனுடைய பரிசுத்த பிரமாணம் விதிக்கும் தண்டனையினின்றும்,
சாத்தானுடைய அதிகாரத்தினின்றும், மீட்கப்படுவதே மீட்பு.
சரீர மீட்பல்ல ஆத்துமமீட்பு.
இது சகல பாவத்தினின்றும், பாவதண்டனையினின்றும் விடுவிக்கும் பூரணமீட்பாயிருக்கின்றது.
மீட்கப்பட்டவர்களுக்கு உத்தரிக்கும் ஸ்தலமொன்று வேண்டுவதில்லை, இதை நிறைவாக்கப் பிறிதொன்று செய்யப்படவேண்டுவதுமில்லை. ரோமர். 6: 16, 17, 19, 20, 22.
இரண்டாவது கவனிக்கவேண்டியது.
இந்த மீட்பை எதினால் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கிரியைகளினால் அல்ல.
சன்மார்க்கச் சீவியத்தினால் அல்ல.
அறிவினால் அல்லு.
நாங்கள் தேவனுடைய வாக்கை வாசித்தும், சாத்திரங்களைக் கற்றுத் தேறியும், மனுஷருக்கு முன் குற்றமற்றவர்களாய்ச் சீவித்தும், அநேக தருமத்தைச் செய்தும்வருவது நம்மை மீட்கமாட்டா.
பணத்தைக் கிரயமாய்க் கொடுத்து மீட்பை வாங்கக்கூடாது.
ஒரே தேவனையும் அவர் இரக்கத்தையும் விசுவாசிப்பதினால் மாத்திரம் மீட்பைப் பெறக்கூடாது. யாக். 2: 19.
இந்த மீட்பு யேசுக்கிறிஸ்து மூலமாகவும்.
விசுவாசத்தைக்கொண்டும்.
பாவநிவிர்த்திக்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தினாலும் உண்டாகின்றது.
விசுவாசத்தின் வழியாய்க் கிறிஸ்துவுக்குள் ஐக்கப்படுவதினால் இம்மீட்புக்குப் பங்காளராகிறோம்.
மூன்றாவது கவனிக்கவேண்டியது.
இரத்தஞ் சிந்துதலினால் அதாவது கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்பைப் பெறுகிறோம். இதுவே செலுத்தப்பட்ட கிரயம். எபி. 9. 22. 1 பேதுரு. 1; 18, 16, எபி. 9. 12,
கிறிஸ்துவின் மரணமேயன்றி வேறொன்றும் எங்கள் மீட்பைச் சம்பாதிக்கமாட்டாது.
நாலாவது கவனிக்கவேண்டியது.
இம்மீட்பு பாவமன்னிப்பைத் தருகின்றது, சகலபாவங்களுக்கும் மன்னிப்பைத் தருகின்றது. எபி. 8 : 12.

போதனை.

1 வது. இம்மீட்பு அருமையானது.
இதின் கிரயம் கிறிஸ்துவின் இரத்தம்.
இதின்பலன் ஆத்துமா நித்தியமரணத்தினின்று விடுதலைபெறும் இரட்சிப்பு.
2. மீட்புக்காகப் பிறிதொன்றில் நம்புகிறது பயித்தியம்.
சைவத்திலும், மகமதியத்திலும் மீட்பில்லை.
3. எப்பொழுதும் கிறிஸ்துவை இரட்சகராகக் காட்டுவதும், பவுலைப்போல் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையன்றி வேறொன்றையும் அறியாமலிருப்பதும் அதிக முக்கியம். 1 கொரி. 2 : 2
4. இம்மீட்புச் சம்பாதிக்கப்பட்டபடியினால் கிறிஸ்துவில் அன்புகூரவும்.
அவருக்கு ஊழியஞ்செய்யவும்.
பாவத்துக்கு விடுதலைபெற்று அவரைப்போலாகத் தெண்டிக்கவும். கடமை எங்கள்மேல் ஏற்பட்டிருக்கின்றது.
உமக்கு இந்தமீட்பில் பங்குண்டோ ?
[உத்தரம்.] ஆமென்றால் அத்தாட்சியென்ன ?
[உத்தரம்.] இல்லையென்றால் மீட்பைப்பெறாமல் மரணமடையப்போகிறீரா ? சீவியத்தில் பெறாவிட்டால் மரணத்தின்பின் பெறமாட்டீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A TRICK.

## பித்தலாட்டம்.

*தீவினைசெய்வது மூடனுக்கு விளையாட்டு. நீதி. 10 : 23. மூடத்தனம் புத்தியீனனுக்குச் சந்தோஷம் நீதி. 15 : 21.*

அநேக சிறுவர்கள் தங்கள் அயலாருடைய தோட்டத்தில் புகுந்து பூச்செடிகளைப் பதித்துப் பயிர்வைத்திருக்கும் சட்டிகளைச் கவிழ்த்துப் பந்தலிலே படரவிட்ட முந்திரிகைக் கொடிகளை அறுத்துச் சேதப்படுத்தி விடுகிறார்கள். வேறுசிலர் கிறிஸ்தவர்கள் கூடித் தேவாராதனைசெய்யுந் தருணத்திலே போய்க் கல்லெறிந்து அவர்கள் சிந்திக்குஞ் சிந்தனைகளைக் கலக்கிக் கேடுசெய்கிறார்கள். வேறுசிலர், தங்கள் அயலார் சமாதானமாய் நித்திரைகொள்ள விடாமல் வீடுகளின்மேலே கல்லெறிந்து கலக்குகிறார்கள். அவைகளைக் கண்டவன், என் இப்படிச்செய்கிறீர்களென்று கேட்டால், விளையாட்டுப் பார்க்க என்கிறார்கள் இப்படித் தேவனுக்கும் அயலவனுக்கும் விரோதம் செய்தோ விளையாடுகிறது சிலகாலத்தின்முன் பத்துப்பன்னிரண்டு பிராயமுள்ள ஓர் சிறுவன் தன் அயலான் வீட்டுக்குப்போய், "நான் ஒருமுறை உம்முடைய களஞ்சியத்தின் சாளரவாயிலின் கண்ணாடியின்மேல் கல்லெறிந்து அதை உடைத்துப்போட்டேன்" என்றும் "அந்த நட்டத்தை நீக்கப் பணங்கொடுப்பேன்" என்றுஞ் சொன்னான். அவன் இது தீதென்று தானாய் உணர்ந்து அறிக்கையிட்டானோ, தனது பெற்றோரால் ஏவப்பட்டு அறிக்கையிட்டானோ தெரியாது. அந்த அயலான் தன் களஞ்சிய வீட்டுக்குப் போய் சாளரவாயிலின் கதவிலே பதிக்கப்பட்ட ஒன்பது கண்ணாடித்துண்டுகள் உடைக்கப்படிருந்ததையும், உடைத்த கல்லுகளெல்லாம் அங்குமிங்கும் களஞ்சியவீட்டுப்பாதையிலே இருக்கவுங் கண்டான்.

இந்தச் சிறுவன் செய்த தீவினையில் பகிடியுமிருக்கிறதாவென்று, தேர்ந்து பாருங்கள். அந்தத் துரைமகனோ. முன் எப்போவென்கிலும் இந்தச் சிறுவனைக் கோபம் மூட்டவில்லை, இச்சிறுவன் பழிவாங்கஎண்ணி, இதைச் செய்யவுமில்லை, துரைமகனுக்கு நட்டம்வருவிக்கும் நோக்கமாக இதைச் செய்யவுமில்லை. இதிற் பகிடி எங்கேயிருக்கிறது? கண்ணாடிகள் உடைகிற சத்தத்தைக் கேட்கிறதிலா? தான் எறியுங் கற்கள் இலக்காய்க் கண்ணாடித்தட்டில் விழுகிறதைப் பார்க்கிறதிலா அவனுக்கின்பம்? தனக்கு நட்டஞ் செய்யாத ஒருவனுடைய ஆஸ்தியைச் சேதப்படுத்தி அவனைக் கெடுக்கிறதில் ஒருவனுக்கின்பமுண்டா? பாருங்கள் ஆனாலும் இவ்வித தீவினைகளில் இருவகையான கேடுகளிருக்கின்றன. முதலாவதாகப், பெற்றோருக்கு இது மிகவும் மனவிதனம், அவர்களைச் சஞ்சலப்படுத்துவது மனதார இவனுக்கு இதமாயிருக்குமா?

இரண்டாவதாக, இச் சிறுவன்செய்த தீவினை அயலகமெங்கும் சீக்கிரத்திற் தெரிய வந்துவிடும். அந்த அயலகத்தில் அன்றுமுதல் நடக்கும் தீவினைகளெல்லாம் இவனே செய்தானென்று, எவரும் அசங்கைப்படுவார்கள். ஒரு வீடு எரிந்தால் அந்தவீட்டுக்கு நெருப்புவைத்தது இவன்தான் என்பார்கள்.

பிள்ளைகளே, நீங்கள் கிறிஸ்துநாதரை உற்றுப்பாருங்கள். அவர் பாலியமாயிருந்தபொழுது எப்படி நடந்தார். தேவனுக்கும் மனுஷருக்கும் பிரியராயல்லவோ? அவர் வாலிபனாய் நடந்தபொழுது எப்படி நடந்தார்? தேவனுக்கும் மனுஷருக்கும் இதமானவைகளைச்செய்தார் அல்லவோ? அவர் குருவாயிருந்தபோது என்ன செய்தார்? பிதாவின் மகிமைக்கும் மனுஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைய ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் நயமானதை அல்லவோ செய்து வந்தார்? ஆகையால் நீங்களும் அவரையே பற்றிநடவுங்கள். அப்பொழுது நீங்கள் இம்மை மறுமை இரண்டிலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பீர்கள்.

L. S.

## HINDUISM.

## இந்துமதம்.

### IT IS NOT UNIVERSAL.

இந்துக்களே, தேவனை முன்னிட்டு உங்கள் சமயத்தை ஆராயப் புகும்பொழுது, சமயிகளைத் தூஷணிப்பதல்ல, சமய வழுக்களை உமக்குத் தெரிவிப்பதே நமது நோக்கமென்பதை ஆரம்பத்தில் அறிவிக்கிறோம்.

உலகத்திலே அநேக சமயங்கள் இருக்கின்றன அல்லவா, அவைகளில் ஒவ்வொன்றும் தான்தான் மெய்ச்சமயமென்று கொக்கரித்து மற்றவைகளைக் கண்டிக்கின்றன. இதனாலும் சருவலோக சம்மதத்தினாலும் ஒரே தேவனால் மனுஷனுக்கு அருளப்பட்ட ஒரே மார்க்கம் மாத்திரம் இருக்கவேண்டுமென்பது திருஷ்டாந்தப்படுகிறது.

நிலம், நீர், அனல், காற்றுமுதலான இன்றியமையாத ஈவுயாவையும் எவ்வகையோர்க்கும் தேவன் சாதாரணமாய்க் கொடுத்திருக்கிறார். இவை நமது, உமது, நமக்கேராது, உமக்குத்தரும் என்னும் வரையறையில்லாதவைகளாயிருக்கின்றன. இதுபோலவே அந்த ஒரேதேவனானவர் ஒரேமாமிசமும், ஒரேவகையான ஆத்துமாவும், ஒரேவகையான அந்தக்கரணங்களுமுள்ள ஒரேசாதியான மனுஷர் யாவருக்கும் பொதுவான ஒரே இரட்சிப்பின் மார்க்கத்தைக் கொடுத்திருப்பாரென்பது அத்தாட்சி வேண்டாத சத்தியம். உலகப்பட்டத்தில் உள்ளங்கையத்தனையான இந்துதேசத்தில் வசிப்பவர்மாத்திரம் அனுசரித்தற்கியையான போதனை சாதனையுள்ளதும் மற்றைத்தேசவாசிகளான இலட்சக்கணக்கான சனங்கள் ஆசித்தாலும் யோசித்தாலும் அனுசரித்தலுக்குக் கூடாததுமான ஓர் சமயத்தை, வேண்டுவோர் வேண்டுகோளறிந்து விடையருளும் பரமபதி அருளிச்செய்தாரென்பது யுத்தி நியாயங்களுக்கு எவ்வளவேனும் ஒவ்வாத பேச்சாயிருக்கிறது. 'தேவன் ஒருவரென்றும், அவர் அருளியவேதம் ஒன்றென்றும், குருதீட்சை ஒன்றென்றும், மோட்சம் ஒன்றென்றும், அம்மோட்சத்தை (ஒன்றான வேதவழியில்நின்று, ஒன்றான தீட்சைபெற்று ஒன்றான தேவனைவணங்கி) பெறத்தக்க மறுபிறவி ஒன்றென்றும்'' உமது ஞானிகளுஞ் சொல்லியிருக்கிறார்களே.

காரியம் இப்படியிருக்கையால், இந்துசமயமானது ஒன்றான மெய்த்தேவனால் மக்களுயிர்க்கு உறுதியைப் பயப்பித்தற்பொருட்டு அருளப்பட்ட அந்த ஒன்றான மார்க்கந்தானோ என்று விசாரணைபண்ணுவோமாக.

இந்துசமயமானது இந்துஸ்தானமென்னும் இந்தஇடத்தில் வசிக்கும் இருள்பிடித்த இந்துக்களாகிய நீர் அனுசரித்தற்கு மாத்திரம் இசைவானதாய் இருக்கிறதேயன்றி, எந்தெந்த இடத்திலும் இருக்கிற சாதிக்காரர், பாஷைக்காரருக்கு சாதாரணமானதாய் அருளப்பட்ட திவ்விய சமயமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சற்றே விபரமாய்ச் சொல்லுகிறோம், கேளுங்கள். இந்துசமயம்,

இல்லையைக்காண, காசியிலிறக்க, கங்கையில் ஸ்நானிக்க என்பவற்றுலும் பிறவற்றுலும் ஸ்தான சம்பந்தியாயும், பிராமணனே சமர்த்தமும், அவனே மறையாளனென்பன முதலியவற்றுல் வருணசம்பந்தியாயும், இந்த அட்சரேகைக்கு இசைவான, உதய, உச்ச, அஸ்தமன முதலிய நிலைக்கிசைந்ததாய்ச் சொல்லப்பட்ட சோதிட சம்பந்தியாயும், இந்துஸ்தானிகள்மாத்திரம் தழுவத் தன்னக்கூடிய ஆசார அநாசார சம்பந்தியாயும் இந்துக்களுக்குமாத்திரம் கைகூடத்தக்க உண்பனவு உடுப்பனவு நடப்பனவு முதலியவற்றிற்கே இசைவுள்ளதாயும் இருக்கின்றது.

துருவவாசிகளுக்கும் பிறகண்டங்களிலே வசிப்போருக்கும் பரதகண்டமாகிய உங்கள் பூமியில் பிறக்குஞ் சலாக்கியம் கிடைக்கவில்லையென்றாலும், காசி, சிதம்பரம் முதலிய ஸ்தல தரிசனைகளும், லிங்கப் பிரதிஷ்டையாய் வரும் புண்ணியபலமும், இளநீர் முதலியவற்றுல் அபிஷேகஞ்செய்யும் பேறும், உங்கள் சமய நூல்களில் சொல்லப்பட்ட நைவேத்தியங்களை நிவேதிக்கும் இயல்பும், திருவிளக்கிடுவதினுல் அடையும் பலனும், கௌசிகரிஷி கோத்திரத்திற் பிறந்த ஆதிசைவராகிய பிராமணுசாரிய தீட்சையும், உங்கள் பாடல்களில் சொல்லப்படும் ஆசௌசப் பிரயோகங்களும், தகித்துத்தரிக்கப் பிள்ளையார்பிடிக்கக் கோமயமும், அதுவுட்படச்சொல்லப்பட்ட பஞ்சகௌவியமும், உங்கள் பாஷைகளில் வாசிக்கத்தக்க புராணங்களும், உச்சரிக்கப் பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களும், ஸ்நானிக்கக் கங்கை, சேது முதலிய தீர்த்தங்களும, உண்ணச் சுத்தபோசனமும், உடுக்க தோய்த்துக்கட்ட தோல் ரோமங்களல்லாதவற்றுல் செசவுபண்ணிய வஸ்திரங்களும், மற்றுங் கண்டப்பகுதிகளில் வசிப்போர் பலர்க்கு இல்லவேயில்லை. அப்படியானுல் இதுசொல்லப்பட்ட துருவகண்டவாசிகளுக்கு உரிமையில்லாமல் சமைக்கப்பட்ட ஓர் சமயமென்று தோன்றுகிறதே.

தெளிதல்.

சிநேகிதரே, உங்கள் சமயம் ஆத்தும கோடிகளை இரட்சித்தற்பொருட்டுத் தயாநிதியாகிய தேவன் அருளினதென்று நினைக்க இடமில்லை. இதாகிதங்கள், கால இடபேதங்கள் அறியாத கிஞ்சித்துவமுள்ள மனுஷனுல்கற்பிக்கப்பட்டதென்று சொல்லத்தக்க அபூரணமுள்ளதாயிருக்கின்றது. இந்துக்களுக்குமாத்திரம் ஈடேற்றத்தின் வழியைக்காட்டி, சாத்திர சூத்திர விஷயங்களில் வல்லவரும், செங்கோல் திறமையுள்ளவரும், பிறருமாகிய கோடாகோடி சனங்களை வஞ்சித்துவிட்டாரென்று நினைப்பது பெருந்தப்பறையல்லவா. காப்பிரிகள் தாங்கள் அதிக சொரூபிகளென்றும் தேவனுல் நேசிக்கப்பட்டவர்களென்றும் மூடத்தனமாய்ச் சொல்வதுபோலப், பாவங்களுக்குளெல்லாம் கொடிதாயிருக்கும் பாவங்கள் நிறைந்த பாடல்களையும் விக்கிரககோவில்களையும் புறம்பான கிருத்தியங்களையும் கொண்டாடுகிறநீரே உம்மை மெய்ச்சிக்கொள்ளுகிறீர். உங்கள் பூமி புண்ணிய பூமியென்றும், நீங்கள் புண்ணிய ஆத்துமாக்களென்றும், உங்கள் சமயம் பரிசுத்தமுள்ளதென்றும், பேசுகிறதென்ன! இது ஒரு புதினம். மிலேச்சராகிய நீர் அறிவாளிகளை மிலேச்சரென்பது துணிகரம். இந்துக்களொழிந்த மற்றக்கண்டவாசிகளைப் பாவாத்துமாக்களென்று நிந்தித்துப்பேசுவது அதருமமாயிருக்கிறது. நீங்கள் [illegible] சாதியாருக்குள், உங்களுக்குள் இல்லாத தேவபத்தி, இராசாங்கநீதி, கல்விவிற்பத்தி, சற்பாத்திர தர்மங்கள்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்துவருகிறதை நீங்கள் பிரத்தியட்சமாய்க்கண்டும், வானரந் தன் வாலைப் புளுகுகிறதுபோல உங்களை உயர்த்திப் பேசிக்கொள்ளுகிறீர்கள். கிரட்சவாசிகளைப்போலத் துருவவாசிகளையும் படைத்த சருவலோகநாயகராகிய தேவன் இந்துசமயத்தை அருளியிருப்பாராகுல் உமக்கேயன்றிப் பிறர்க்கும் பயன்படாத இப்படி ஒருசமயத்தைப் பாரபட்சமாய்க் கொடுப்பாரா? யாவருக்கும் பொதுவான தேவன், சாதாரணமாய் ஈந்தருளிய கிறிஸ்தசமயத்தை அங்கிகரிக்க வகைபார்ப்பீராக. அது இங்கிலாந்திலும், அமரிக்காவிலும் மற்றெந்தத் தேசத்திலும், ஒருவாக்கும், எழுத்தும் மாற்றப்படாமல் சாதாரணசமயமாய்க் கைக்கொள்ளத்தக்கதாயிருக்கின்றது. ஒரேசூரியன் யாவர்க்கும் நமது சமது என்று சொல்லத்தக்கதாய் விகற்பமின்றித் தரிசனை கொடுக்கிறதுபோல, கிறிஸ்தசமயமும சகலருக்கும் ஒன்றாய் நின்று இருளில்சோதியை வீசுகிறதே. இங்கிலீசர் நாழிகைவட்டம் முதலியவற்றை இந்த ரேகைக்கு இசையத் திருப்புகிறதுண்டு. விவிலியநூலிலோ எந்தத்தேசத்திற்கிசையவாயினும் மாற்றிய ஒருசெய்கையை எப்பொழுதாயினும் கேட்டதுண்டா? மூலபாஷைக்கு வழுவிப்போமோ என்கிற எம்பவிப்பு அவரிடத்திலிருக்க நாம் மட்டிட்டதேயன்றி, ஊருக்குத்தக்க பாங்கான விகற்பத்தைக் கற்பித்ததை அறியோம்.

எல்லாமறிந்த சருவஞானமுள்ள தேவன் ஆக்கியோராயிருப்பதினால் கிறிஸ்துமார்க்கம், எந்தச்சாதியாருக்கும், பாஷைக்காரருக்கும், ஸ்திதியிலுள்ளவருக்கும் ஏற்றதாகவேயிருக்கிறது.

சிநேகிதரே, இவைகளை யோசித்துப்பார்த்து, இந்துமதமல்ல, கிறிஸ்தசமயமே தேவனால் அருளப்பட்ட ஒன்றான மெய்ச்சமையமென்று ஒப்புக்கொள்வீராக. (இன்னும்வரும்.)

E. H.

## CLAIMS TO INFALLIBILITY EXAMINED.

## யாப்பு தவறற்றவரேன்ற கோள்கைக்கு அத்தாட்சி உண்டா.

எரிகிற முட்செடியில் தேவன் மோசேக்குத் தரிசனமாகி இஸ்ரவேற்சனங்களை அடிமைத்தனத்தினின்று மீட்பவன் நீயேயென்று சனங்களுக்குத் தெரிவியெனச் சொன்னபோது, அவன் அவர்கள் என்னை நம்பார்களே என்று தடை சொன்னான். அப்பொழுது அவனுக்கு அற்புதஞ்செய்யும் வல்லமையைத் தேவன் அருளினதினால் அத்தடையை நீக்கினார்.

யேசுக்கிறிஸ்து நம்மைப் பாவத்தினின்று விடுவிக்கும் இரட்சகராகத் தம்மை நமக்கு வெளிப்படுத்தியபொழுது, பிதா தம்மை அனுப்பினார் என்பதற்குத் தாம்செய்யும் அற்புதங்களையே அத்தாட்சியாய்க் காண்பித்தார். அப்போஸ்தலர், தேவன் தமது குமாரனின் மரணத்தினால் பாவிகளுடன் ஒப்புரவாக்கப்படுவாரென்றும், அந்த ஒப்புரவாக்குதலின் வாக்கைத் தங்களிடத்தில் ஒப்புவித்தாரென்றும், மனுஷசாதிக்குத் தெரிவித்தபொழுது, அவர் அடையாளங்களைக்கொண்டும், அதிசயங்களைக்கொண்டும், அற்புதங்களைக்கொண்டும், பரி[illegible] வரங்களைக்கொண்டும் அவர்களைக்குறித்துச் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இத் தேவ தானுபதிகளின் குணத்தைப் பரிசோதிக்கும்பொழுது மோசேயை மிகச் சாந்தமுள்ளவனாகக் காண்கிறோம். யேசு மகிமை நிறைந்த ஆண்டவராயினும் தம்மைத்தாமே தாழ்த்தி மிகத் தாழ்மையுடனே நம்மைச் சந்தித்தார். அப்போஸ்தலரும் எங்குந் திரிந்து பாவிகளைத் தேவனுடன் ஒப்புரவாகுங்களென்று கண்ணீருடன் வேண்டிக்கொண்டார்கள். பேதுரு தனது உடன் மூதியோரைத் தேவ சுதந்தரத்துக்கு அதிகாரிகளாயிராதபடி வெளியரங்கமாக எச்சரிக்கிறார்.

அப்போ, பாப்புவுக்கே மனுஷர் யாவரும் சமய காரியங்களில் கீழ்ப்படியவேண்டுமென்று ரோமான்சமயம் ஒரு பிரமிக்கத்தக்க பிரசித்தம் பண்ணும்போது, அதிகார அடையாளங்கள் இன்றியிருப்பதால் நாம் அதை எதிர்ப்பது ஆச்சரியமா?

இன்னும் பாப்புவுடைய நடக்கையைச் சரித்திரங்களினால் அறிகிறபடி, மோசே கிறிஸ்து அப்போஸ்தலர் என்பவர்களுடைய இலட்சணங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது முழுவதும் மாறாகவிருப்பதைக்கண்டு, நாம் விசனமடைவது ஆச்சரியமா?

மேலும் பாப்புவுடைய போதனைகளின் தன்மையை ஆராயும்பொழுது அவர்களுடைய போதனைகளைப்போல மனுஷருக்கு அன்பும் இரக்கமும் நிறைந்தவைகளாய் இருப்பதற்கு மாறாய் அகங்கார கற்பிதங்களாய் இருக்கின்றன. அப்போ நாம் பாப்புவை நோக்கி, "தேவன் உன் மூலமாய்ப் பேசவுமில்லை, தேவதானுபதிக்குரிய அத்தாட்சிகளாவது, குணமாவது, போதனையாவது உன்னிடத்திலில்லை" என்று சொல்வது ஆச்சரியமா?

J. C. S.

**BRIDEGROOM RUINED BY THE BRIDE.**

## மணவாளனைக் கெடுத்த மணவாட்டி.

ஓர் வாலிபன் தன் சரீர சவுக்கியத்துக்கென்று இடைக்கிடையே வெறியுள்ள சில குடிவகைகளைப் பாவித்துவந்தான். ஒருநாளையில் அவன் தன்னந்தனியே உழுக்கார்ந்திருக்கையில், தான் கொஞ்சக்காலமாக இடைக்கிடையே பாவித்துவரும் குடிவெறியினால் உண்டாகப்போகிற தீமைகளைக் குறித்துச் சிந்தித்துத் திடுக்கிட்டுப் பயந்து தணுக்கெறிந்து, என் சீவனுள்ள காலமெல்லாம் இவ்வகையான மசுதுள்ள வஸ்துக்களை இனிமேல் எப்போவாகுதல் பாவிப்பதில்லையெனத் தீர்மானித்து, அன்றுதொடக்கம் மசுறுள்ள வஸ்துக்களை மூற்றாய் விட்டுத்தள்ளினான்.

இப்படியிருக்கையில், அவ்வாலிபன், கல்வியறிவில் தேறியவளும் பாக்கியவாட்டியுமாகிய ஓர் துரைச்சாணியை விவாகம்பண்ணிக்கொள்ள வாக்குக்கொடுத்திருந்தான். விவாக தினமும் குறிக்கப்பட்டது. இவர்களுடைய விவாகச்சடங்குக்கு அனேக துரைமக்களுந் துரைச்சாணிகளும் அழைக்கப்பட்டு வந்துகூடினார்கள். விவாகச் சடங்கு நடந்தபின், யாவரும் பந்திபோசனம்பண்ணும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. பீடத்தின்மேல் பிறண்டி, சாராயம், தம் முதலிய குடிவகைகள் வைத்திருப்பதை மணவாளன் கண்டு, தான் இந்தப் பந்திபோசனத்துக்கு வரமாட்டேனென்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தான். பிதாவானவன் அப்படியல்ல மகனே. மறுத்துச் சொல்லாதே, நீ வரத்தான்வேணுமென்று கேட்க, அவனோ வரமாட்டேனென்று சொன்னான். பெண்கொடுத்த மாமனாரும் போய்க் கேட்டார். அதற்கும் அவன் மறுத்தான். கடைசியில் மணவாட்டி ஒரு பாத்திரஞ் சாராயத்தைத் தன் கரத்தேந்தி, தனது மணவாளனுக்குச் சமீபமாய்ப் போய், எனது அன்பரே, அருமைப்பெருமையான நாயகரே, எனதுநிமித்தம் ஒருதரம் மாத்திரம் இவ்வளவையும் பருகிக்கொள்ளுமென்று சொல்லி வருந்திக்கேட்டதுமல்லாமல், அவன் பருகும்படியாகத் தன் கையிலிருந்த பாத்திரத்தையும் அவன் உதடுகளுக்குக் கிட்டக் கொண்டுபோய்ப் பருக்கினாள். தனது நேச மணவாட்டியின் சொல்லை மறுக்கக்கூடாமையினால், அவனும் வாங்கிக் குடித்தான். அந்தநேரம் முதலாக முன் அவனுக்குண்டாயிருந்த விருப்பமும் ஆசையும் தலைகாட்டின. நாலுவகையான குடிவெறிப் பதார்த்தங்களையும் வாங்கி வாங்கி அளவுக்கு மிச்சமாய் உட்கொண்டான். கொஞ்சக்காலத்துக்குள் அவன் கெட்டுப்போனான். பெண்சாதியைக் கைநெகிழவிட்டான். வேலையை அசட்டைபண்ணினான். குடிவெறியனாகவே மரித்தும்விட்டான்.

சிநேகிதனே, இவனுக்குண்டான முடிவைப்பார்த்து எச்சரிப்படைந்துகொள். வெறியுள்ள பதார்த்தங்களைத் தொடாதே, ருசிக்காதே, இம்மையிலுண்டாகும் நிர்ப்பந்தங்களுக்கும் மறுமையில்வரும் நரக ஆக்கினைக்கும், முதல் முதல் குடிக்கும் வெறியுள்ள பதார்த்தப் பாத்திரமே முதலாம்படியென்று உணர்ந்துகொள்.

L. S.

## Poppe's History.—பப்பியைப்பற்றிய கதை.

ஒரூரில் ஆறுவயசுள்ள ஒரு சிறுவன் இருந்தான். அவனுக்குப் பப்பியென்று பெயர். அவன் நற்குணனும் புத்திசாலியுமாயிருந்தான். ஆயினும் தான் மற்றவர்களுக்குக் குறைந்தவன் அல்லவென்ற எண்ணங்கொண்டவனாயிருந்தான். அவனிருந்த கிராமத்துக்குச்சேர்ந்த சிறுவரில் அநேகர், ஆற்றிலேபோய் நீந்திவிளையாடி வருவார்கள். குறித்த பப்பியின் மாதா, தனது பிள்ளையில் ஒன்று அந்த நதியில் போய் விளையாடி மாண்டுபோனநாள்முதலாகப், பப்பியைநோக்கி மகனே, நீ, நதியிற்போய் ஒருபொழுதும் விளையாடவேண்டாம்; போய்விளையாடினால் நிசமாகவே உன்னைத் தண்டிப்பேனென்று வற்புறுத்திச் சொல்லியிருந்தாள்.

பப்பியோ, தன் மாதாவின் கட்டளையை அசட்டைபண்ணி, ஒருநாள், மற்றும் பிள்ளைகளுடனே கூடி ஆற்றங்கரையில் விளையாடுகையில் தண்ணீரில் விழுந்து தன் உடுப்பு நனைந்துபோக வீட்டுக்குப்போனான். அவன்மாதா இதைக்கண்டு இவனுடைய கீழ்ப்படியாமையைக் குறித்து, அவனுடனே வெகுதூரம் புத்தியாய்ப் பேசி, இனிமேல் எப்போவென்கிலும் ஆற்றிலே விளையாடப்போனால் உன்னைத் தண்டிப்பது நிசமென்று திருப்பவும் வற்புறுத்திச் சொன்னாள்.

அந்தச் சிறுவனோ அந்நாள்முதலாகத் தனது மாதாச்சொன்ன புத்தியை மறவாது அடிக்கடி நினைவு[illegible] வந்தான். 3 வாரங்கள் சென்றபின்மேல் ஒருநாள் பப்பி, தங்கள் வளவுப்படலைக்கு முற்புறத்திற்போய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொன்றையும் வாய்க்குள்வைத்து உமிழ்ந்துகொண்டு, ஆகாயத்திலும் உயர்ந்
தமேட்டிலும் காணப்படும் செக்கர்வருணத்தையும் தெருக்காட்சியையும்
பார்த்துக்கொண்டிருக்கையில், அவனுக்கெதிராகவிருக்கும் மேட்டிலிருந்
து சிறுவர்கூட்டம் ஆற்றிலேபோய் நீந்திவிளையாடும்படி வந்தார்கள். அ
ப்பொழுது பப்பி தனக்கு நேரேவரும் சிறுவர்கூட்டத்தை நோக்கி, வாய்க்
குள்வைத்த பெருவிரலையுமெடாது, அகோ, யோவான், எங்கேபோகிறீர்க
ள் என்றான். யோவான் அவனுக்கணித்தாய் வந்து, பப்பி, நீ என்னசெய்
துகொண்டிருக்கிறாய்? ஏன் எமிலாந்திப்பார்க்கிறாய்? இப்பெயர்ப்பட்ட சிறு
பிள்ளைத்தன்மையை விட்டுவிடத்தக்க பிராயமுள்ளவனாய் இருக்கிறாயல்ல
வா? எழும்பு எழும்பு, என்றான்.

உடனே அரிசு என்பவனும், பப்பியைப்பார்த்து நீயொரு பெரிய பைய
ன், பெருவிரலையெடு, எங்களோடே விளையாட வா, நீயொரு சமர்த்தன்,
இதுதான் தருணமென்றான்.

நீங்கள் இப்பொழுது எங்கே போகிறீர்களென்று பப்பி அவர்களைக்கே
ட்டான். அதற்கு அரிசுப்பிள்ளையும் அவனுடன் கூடிக்கொண்டுவந்த
அரிப்பிள்ளையும் தொம்பிள்ளையும் யோன்பிள்ளையுமாகிய நால்வரும் ஒருமி
த்து, வேறு எங்கேபோகிறது, ஆற்றில் நீந்திவிளையாடத்தான் என்று சொ
ன்னார்கள்.

பப்பியோ நான் உங்களுடன் வரக்கூடாதென்றான். அவர்களில் அரிப்
பிள்ளையும், யோன்பிள்ளையும், நீ ஏன் வரக்கூடாதென்றார்கள்.

பப்பியோ, என்மாதா என்னை ஆற்றில் விளையாடப்போகப்படாதென்று
சொல்லியிருக்கிறாள் என்றான். அதற்குத் தொம்பிள்ளை இது உன் மாதாவி
ன் உபாயமான நொடியென்று சொன்னான். உடனே எல்லாருங் கைதட்
டிக் கெக்கட்டமிட்டுச் சிரித்தார்கள். பப்பியுஞ் சிரித்தான். யோன்பிள்
ளை இதினால் உன்மாதாவுக்கு என்னவந்துவிடும், காரியமில்லை வாவென்றா
ன். பப்பியோ அப்படியல்ல, நான் வந்தால் மாதா என்னைத் தண்டிப்பாள்
என்றான்.

யோன்பிள்ளையோ, நல்லது, நல்லது, எனது மாதாவும், அடிப்பேன் என்று
சொல்லுவாள். ஆக்கினைபண்ணினதில்லையென்றான்.

அதற்குப் பப்பி எனதுமாதா அப்படியல்ல, அவள்சொன்னால் சொன்ன
தாயிருக்குமென்றான்.

தொம்பிள்ளையோ, வா வா நான் அதுவெல்லாஞ் சரிப்பிடித்துக்கொள்ளு
வேன். உன்மாதா உன்னை அடித்து ஆக்கினைபண்ணுதபடி அவளிடத்திற்
சொல்லிக்கொள்ளுவேனென்றான்.

கடைசியில் பப்பியும் எடுபட்டு அவர்களுடனே நதியில் விளையாடப்
போனான். அவர்கள் நதியைவிட்டுத்திரும்ப இரண்டுமணித்தியாலஞ்சென்
றது. அவர்கள் திரும்பி வரும்வழியில் தாங்கள் பண்ணிய உபாயதந்திரத்
தைக்குறித்துப் பேசிச் சிரித்தார்கள். பப்பியோ அவர்களுக்குப்பிறகே வி
ம்மிவிம்மி அழுதுகொண்டுவந்தான். அவன் கண்ணிலிருந்து வடியுங் கண்
ணீரை அவர்கள் உற்றுப்பார்த்து, பப்பி, அதென்னகாரியம் ஆற்றில் விளை
யாடினது சந்தோஷமாய் இருக்கவில்லையாவென்று கையாண்டிபண்ணி
னார்கள்.

பப்பி அதிகமாய் விம்மி அழுது, விளையாட்டு நல்லதுதான், மாதா என்னை
அடிப்பாளென்று பயப்படுகிறேனென்றான். அப்பொழுது அவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக்கேட்பாளென்று பயப்படுகிறேனென்று பப்பி சொன்னான். நல்லது, பப்பி அழாதே, நீ மாதாவுக்கு நான் போகவில்லையென்று சொல்லு என்றான்.

பப்பி இடுக்கிட்டு அப்படி உண்மையைச் சொல்லாதிருந்தால் அது பொய். பொய்சொல்லுவது எனக்குப் பயமென்றான். கொய்யோ, கொய்யோ, பொய்சொல்லுவது பெருங்காரியமல்ல, நான் அனேகந்தரம் பொய்சொன்னேன், இப்பொழுதும் வீட்டுக்குப்போகிறேன், என் மாதா நீ எங்கேபோனாயென்றுகேட்டால் நான் யக்கோவைக் காணப்போனேனென்று சொல்லுவேன். அவள் நம்பிக்கொள்ளுவாள் என்று மற்றொருவன் சொன்னான். அதுவும் பொய்தானென்று பப்பிசொன்னான். இவ்வாறு விளையாட்டுத்தோழர் சொல்லிய பின்பு, பப்பியை அவன் வீட்டுப்படலைக்குக்கிட்டவிட்டுப் போய் விட்டார்கள். பப்பியோ, அழுதழுது வீட்டுக்குப்போனான். அவன்மாதா அவனையழைத்துக் கண்ணீரைத்துடைத்துக் காரியம் என்னவென்று வினவினாள். பப்பியோ தான் விளையாட்டுத்தோளரால் அனுப்பப்பட்டு மாதாவின் கட்டளையை மீறி நதியில் விளையாடப்போனது குற்றம், அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று மன்றாடினான். மாதா அவனைநோக்கி, மகனே, நான் உன்னை நேசிக்கிறேன், ஆனாலும், நீ என் கட்டளையைமீறி நடந்ததற்காக நான்சொன்னபடியே தண்டிப்பேனென்றுசொல்லித் தண்டித்தாள். அந்நான்முதலாகப் பப்பியும் தாய்சொன்னபடி நடந்துவந்தான்.

இக்கதையைவாசிக்கும் பிள்ளைகளே, பப்பியைப்போலப் பொய்பேசப் பயப்படுங்கள். பொய்சொல்லும்படி அனுப்பப்பட்டால் உடனே அறிக்கையிட்டுச் சீர்பொருந்துங்கள்.

மாதாக்களே, உங்கள் சிறுவர்கள் ஆகாத விளையாட்டுத் தோழர் தோழிகளுடன் போகவிடாதிருங்கள். அவர்கள் உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதிருந்தால் முன்சொல்லியபடி அவர்களை அன்போடும் பட்சத்தோடும் கடிந்துகொள்ளுங்கள். அப்பொழுதே அவர்கள் நற்சீர்பொருந்தி நல்ல பிள்ளைகளாயிருப்பார்கள்.

## RELIGIOUS INTELLIGENCE.

## மார்க்க சமாசாரம்.

### தமிழ்க்கூலிமிசியோன்.

இந்த மிசியோனின் பதினாறும் அறிக்கைப்பத்திரம் இந்நாட்களிற் பிரசித்தப்படுத்தப்பட்டது. இதில் சித்திரைமாதம் ௩௦ ந் திகதி வரைக்கும் நடந்த சங்கதிகட்குப் பதிலாக, சென்றவருடக் கடைசிவரைக்கும் மிசியோன் வேலையாட்கள் செய்துவந்த வர்த்தமானங்கள் அடங்கியிருக்கும். இத்தவிணைக்குட் பொதுவரவு £ 479-0-8. செலவு £ 467-4-8. அம் முதலில் கையிருப்பு £ 11-16-0. நம்மைத் தைரியப்படுத்தும் சில பிரதான சங்கதிகளுண்டு. இதில் முக்கியமானது கண்டிக் கோவில் கட்டத் தேசத்தி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞ்சோவிற் கட்டுவேலை நடக்குமென்றும், கொஞ்சக்காலத்தில் முடிவு
பெறுமென்றும், இங்கேயிருக்கிற ஐயர் எழுதுகிறார். ❖இப்போ சேகரித்த
பணம் £ 659-18-4. இத்தொகையில் செற்சுமிஷனரிக் கூட்டத்தார்
£ 100. ஐரோப்பியர் £ 56-16-3. சுதேசிகள் £ 500-8-8. கொடுத்தார்கள்.
மீதமான £ 2-13-5 வட்டிப்பணம். சுதேசிகள்கொடுத்த £ 500-8-8 இல்
அஞ்ஞானிகளும் கோப்பித்தோட்டக் கூலிக்காரரும் கொடுத்ததே
அதிக தொகை. இச்செய்தி, கூலிக்காரர் மிஷனிலும் மிஷன் காரியகாரரி
லும் கொண்ட நல்ல சித்தத்தைக் காட்டுகின்றது அல்லவா? மேலும், நன்
மையை எதிர்பார்க்கும் நம்பிக்கைக்கு அடையாளத்தை நாம் காணவில்லை
யா? இவ்வுபகாரிகள் மேலான நோக்கத்தினால் ஏவப்படவில்லையென்று
வைத்துக்கொண்டாலும் இவர்களுந் தங்களுடனொத்தவர்களைப்போலே
மாத்திரமிருந்தும் அவர்களிலும் மிகத் தற்பிரியமுடையவர்களைப்போலும்
இருக்கலாம்.'' இவ்வறிக்கைப் பத்திரத்தில் பிரதான விசேஷமென்
னவெனில், மிஷன் ஆச்சிரமங்களை இரண்டு மாகாணங்களாகப் பிரி
த்தலே. வடமாகாணத்துக்குக் கண்டி மையமாகவும், தென்மாகாணத்துக்
கு அப்புத்தளை மையமாகவும் இருக்கின்றது. முந்தியதுக்கு கிலாக் ஐயர்
(Rev. W. Clark) காரியபாகன். அவருக்கு உபதேசிமார் 11; உபாத்திமா
ர் 3; புத்தகம் விற்கிறவர் 2; இரண்டு சமபளமில்லாத உதவிக்காரர். தென்
மாகாணத்துக்கு இறிபித் ஐயர் பொறுப்பாளி. அவருக்கு 4 உபதேசிமார்
உதவி. கொழும்பு உதவி வேதாகமசங்க அறிக்கைப்பத்திரத்திற் காட்டிய
படி சென்றவருடத்தில் இப்பகுதி வரவு £ 146-6-11½. செலவு £ 138-
13-8½ 1817 ம் ஆண்டுக் கடைசியில் மிஞ்சிய £ 12-2-4½ க்குச் சென்றவருட
த்தில் மீந்தது £ 7-13-3 பிறிற்றானிய மற்றும் அன்னிய வேதாகம சங்கங்க
ளுக்கு இங்கிலாந்திலிருந்துவந்த பொத்தகங்களினிமித்தியம் நாம் கடனாளி
களாயிருக்கிறபடியினால் இந்த அற்ப மிச்சத்தை என்னசெய்ய என்று அறி
யோம். பின்வரும் அறிக்கைப்பத்திரத்தின் இரட்டு உதவிச்சங்கத்தின் நிலை
யைக் காட்டும். இக்கூட்டத்தின் நோக்கம், தேவனுடைய வார்த்தையை
க்கூடியஅளவு விசாலமாய்ப் பற்பல பாஷைகளில் இலங்கைவாசிகளுக்
குள் பரப்புவதே. இந்நோக்கத்தைக்கொண்டே இங்கிலீசிலுந் தமிழிலும்
சீர்மையிலிருந்தும், சென்னபட்டணத்திலிருந்தும் புத்தகங்கள் அழைக்கப்
படுகின்றன. இப்படியிருக்கக் கூட்டத்தவர்கள் கட்டளைப்படி சிங்களத்
திலும், இந்துபோட்டுக்கிசிலும் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இங்ஙனே
நமாகச் சிலவருடங்களுக்குமுன் அனுப்பிய புத்தகங்களில் சிலவற்றைத்
தவிர, மற்றவைகள் விலைப்பட்டன, விலைக்குக்கொண்ட புத்தகங்கள் மற்
றவைகளைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பத்திரப்படுத்தப் படுகிறபடியினால்
கூட்டத்தார் விற்கிறஉபயோகத்தை எடுத்தார்கள். கைம்மாறின்றிக் கொ
டுப்பதைப்பார்க்கிலும் கிரயத்துக்கு விற்கிறதினால் மிகச் சொற்ப புத்தகங்
கள் வருடாந்தம் கொடுக்கப்பட்டாலும், இதினால் சனம் இப்பரிசுத்த ஆகம
த்தை எப்படி மதிக்கிறார்கள் என்று அறியலாம். வேதாகமத்தைச் செல
வுக்குக் கட்டியபடியே விற்கிறார்கள். சீர்மையிலும் சென்னபட்டினத்திலு
ம் இருந்துவரும் புத்தகங்களின் விலையை இந்தஉதவிச்சங்கங் கொடுக்கவே
ண்டியது. தாய்ச் சங்கத்தின் செலவில் அச்சிடப்பட்ட சிங்கள வேதாகமங்
களுக்குக் கட்டுக்கூலிக்கு மேலே அற்பவிலைமாத்திரம் வைத்திருக்கின்றது.
விற்றுப்பெற்றுக்கொள்ளும் பணம் புத்தகசாலை, புத்தகம் விற்கிறவர்களு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org